www.padippakam.com

ஜூலை '95 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை: ரூ.4.

# புதிய கலாச்சாரம்



## பொது சிவில் சட்டம்

## மாயையும் உண்மையும்

படிப்பகம்

www.padippakam.com

நாட்டாமை, எசமான், சின்ன கவுண்டர், பெரிய கவுண்டர், பதினெட்டுப்பட்டி, பரிவட்டம், ஊர் மரியாதை, முறைமாமன், முறைப் பெண் என்று பலவிதமான போதை மருந்துகளும் வாசனைத் திரவியங்களும் கலந்த ஃபார்முலாக்களின் துணை கொண்டு, சாதி, உட்சாதி, கிளைச் சாதிப் பெருமைகளில் அமுக்கித் தமிழ் மக்களை இரண்டு நூற்றாண்டுகள் பின்னோக்கி இழுக்கிறது திரையுலகம்.

சின்னத் திரையோ, 21-ம் நூற்றாண்டின் 'உலகத் தமிழனை' உருவாக்கும் பணியில் ஓசையின்றிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியிலிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்து ஒளிபரப்பப்படும் தூர்தர்சனின் குடும்பச் சித்திரங்களில், தமிழ் கொலை செய்யப்படுவது குறித்து கண்டனமும், தலைகீழான வாக்கிய அமைப்புகள் குறித்த நகைச்சுவைத் துணுக்குகளும் நிறைய வெளியாகிவிட்டன. ஆனால் தலைகீழாக்கப்படுபவை வாக்கியங்கள் மட்டும்தானா என்பதே நம்முன் உள்ள கேள்வி.

கள்ள உறவு, காமவெறி, போதை, பாலியல் வன்முறை போன்ற பிரச்சினைகள்தான் தனியார் தொலைக்காட்சிகளும் தூர்தர்சனும் ஒளிபரப்பும் படங்களில் சித்தரிக்கப்படும் குடும்பப் பிரச்சினைகள்.

துன்பத்தின் சுவடேயறியாத உல்லாசமான களியாட்ட விடுதிகளாகக் குடும்பங்கள் சித்தரிக்கப்படுகின்றன; அல்லது விரக்தியும் மனப்புழுக்கமும் நிறைந்த மூச்சை முட்ட வைக்கும் சிறைகளாகக் காட்டப்படுகின்றன.

மெழுகுவர்த்திகளாகவே சித்தரிக்கப்பட்டு வந்த நடுத்தரவர்க்கப் பெண்கள் இன்று பேராசை கொண்டவர்களாக, திட்டம் போட்டுத் தன் நோக்கத்தை ஈடேற்றிக் கொள்ளும் காரியக்காரிகளாக, பாலியல் வெறி கொண்டவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர்.

தனது கணவனின் நண்பனைப் படுக்கையறைக்கு அழைக்கிறாள் ஒரு பெண்; அவன் மறுக்கிறான்; உடனே ''அய்யோ.. என்னைக் கெடுக்க முயற்சிக்கிறான்'' என்று கூச்சல் போட்டு அவனைப் பழி வாங்குகிறாள்.

இன்னொரு தொடரில், குடிகாரக் கணவனையும் கைக்குழந்தையையும் தலை முழுகி விட்டு ஒரு தொழிலதிபருக்கு வைப்பாட்டியாகி மகிழ்ச்சியாக வாழ்கிறாள் ஒரு இளம் மனைவி.

இவை எதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் கதைகளா? நடுத்தரவர்க்கக் குடும்பங்களின் 'புதுமைப் பெண்' இவ்வாறு தான் இருக்கிறாளா அல்லது இருக்க விரும்புகிறாளா?

இக்கேள்விகளுக்கு விடைகாண சமூகவியல் ஆய்வெதுவும் தேவையில்லை. இத்தகைய தொலைக்காட்சித் தொடர்களுக்குத் திரைக்கதை அமைத்துக் கொடுக்கும் கதாசிரியர்கள் சிலரின் கூற்றைப் பரிசீலித்தாலே போதும்.

கதாசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை நடத்திய ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் கீழ்க்கண்டவாறு கூறியதாம்;

''கதாபாத்திரங்களாக முதியவர்கள் வருவது போல கதை எழுதாதீர்கள். இதனால் தயாரிப்புச் செலவுதான் கூடுகிறது. ரசிகர்கள் யாரும் முதியவர்களைப் பார்க்க விரும்புவதில்லை''

வயது முதிர்ந்த பெற்றோர்கள் நடுத்தர வர்க்கக் குடும்பங்களிலிருந்து விரட்டப்பட இருப்பதன் முன்னோட்டமாக அவர்கள் தொலைக்காட்சிக் குடும்பங்களிலிருந்து துரத்தப்படுகிறார்கள். புதிய பொருளாதாரக் கொள்கைக்கும், அது பரப்பவிரும்பும் நுகர் பொருள் பண்பாட்டிற்கும், அந்தப் பண்பாடு செழித்து வளர்




வதற்குத் தேவையான சிறிய மகிழ்ச்சியான குடும்பம் எனும் பொருளாதார அலகிற்கும் முதியவர்கள் ஒரு இடையூறு, தடையற்ற வாணிபத்தைத் தாமதப்படுத்தும் அதிகார வர்க்க சிவப்பு நாடாவைப் போல, குடும்பத்தில் மேலை நாகரிகப் பரவலைத் தாமதப்படுத்தும் பழமைவாதத் தடைக்கற்கள்தான் முதியவர்கள்.

இத்தகைய அநாவசியமான தொந்தரவுகளை குடும்பங்களிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென தொலைக்காட்சி நிறுவனங்களும், விளம்பரதாரர்களும் விரும்புவதில் வியப்பில்லை. மேலும், அமெரிக்கக் குடும்பங்களில் பெற்றோருக்கு இடமில்லையெனும் போது இந்தியப் பெற்றோர்களுக்கு மட்டும் விசேட சலுகை வழங்க முடியுமா? (சர்வதேசச் சந்தை விதிதான் அதை அனுமதிக்குமா?)

எழுதப்படாத இந்த விதி அநேகமாக அமலுக்கு வந்துவிட்டது என்கிறார் ஒரு கதாசிரியர்: ''நாயும் பூனையும் போல கணவனும் மனைவியும் மோதிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இடையில் குறுக்கிட்டு அமைதிப்படுத்தும் 'பெற்றோர்கள்' என்ற பாத்திரம் அப்புறப்படுத்தப்பட்டு விட்டது.'' முறையான திருமணத்தின் மூலம் உருவான குடும்பம் மகிழ்ச்சியற்ற நரகமாகவும், 'சின்ன வீடு' என்பது மிகுந்த உற்சாகமும் ஆரோக்கியமும் மிக்கதாகவும் காட்டப்படும் பல தொடர்கள் வெளிவந்து விட்டன.

ஸீ(ZEE) டி.வி.யில் 'அந்தாஸ்' என்ற தொடருக்குத் திரைக்கதை எழுதிய அமிரி என்ற கதாசிரியர் கூறினார், ''மனைவி புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருப்பதாக ஒரு காட்சியின் துவக்கத்தை அமைத்திருந்தேன். 'அறிவு ஜீவிகள்தான் புத்தகம் படிப்பார்கள்; பத்திரிகை படிப்பது போல காட்சியை மாற்றுங்கள்' என்று கூறிவிட்டார்கள். ''பெண்கள் புத்தகம் படிக்க முடியாதவர்கள்'' என்பது தானே இதன் பொருள்!''

தான் எழுதாத காட்சியொன்று படத்தில் இடம் பெற்றிருப்பதைக் கண்டு குழம்பிப் போனார் இன்னொரு கதாசிரியர் ''அந்தக் காட்சியில் இடம் பெற்ற பாத்திரங்கள் ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி மதுக் கோப்பைகளைக் கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தனர். முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. கூர்ந்து கவனித்தேன். ஒரு குறிப்பிட்ட சாராயக் கம்பெனியின் மதுப்புட்டிகள் ரசிகர்களின் கவனத்தை ஈர்ப்பது போல வைக்கப்பட்டிருந்தன. மது விளம்பரத்துக்கு உள்ள தடையை மீறும் தந்திரம் இது என்பது பிறகுதான் புரிந்தது''

பெரிய திரையைக் காட்டிலும் சின்னத் திரையில் அதிக சுதந்திரம் இருப்பதாகவும், ஆக்கப்பூர்வமான கலைப்படைப்புகளை உருவாக்கும் வாய்ப்பு தோன்றியிருப்பதாகவும் சில இயக்குனர்கள் பிதற்றிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்தச் சுதந்திரத்தின் நீள அகலத்தை விளம்பரதாரர்கள் கறாராகத் தீர்மானித்து விடுகின்றனர்.

குடும்பத்தின் பொருளாதார மற்றும் பண்பாட்டுப் பிரச்சினைகள் விவாதத்தின் வாயிலாகவும் கருத்து மோதல்களினூடாகவும் ஏதோ ஒரு வகையாகத் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. அதிகாரமும் செல்வாக்கும் மிக்க தொலைக்காட்சி என்ற புதிய குடும்ப உறுப்பினரின் வருகைக்குப் பின் எல்லாம் மாறி வருகிறது.

கவர்ச்சி மிக்க இந்த சர்வாதிகாரியின் சந்நிதியில் மூன்று தலைமுறைகளும் கைகட்டி வாய் பொத்தி நிற்கின்றன. பண்பாட்டு மாற்றம் ரசாயன மாற்றம் போல கண்ணுக்குத் தெரியாமல் நடந்தேறுகிறது. உருவாக்கப்பட்டு வரும் இந்த உலகப்பண்பாடு எந்தவொரு இனத்திற்கும் விசுவாசமானதல்ல; அது சந்தைக்கு மட்டுமே விசுவாசமானது.



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 13
● குரல்: 12-2
● மே-ஜூலை '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 48.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்
இரா.சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை-600 031.

# பாடநூலில் ஜெயலலிதா வரலாற்றைத் திரிப்பதே வரலாறானது

தமிழ் நாட்டு முதல் மந்திரியாக உள்ள பார்ப்பன - பாசிச ஜெயலலிதா ''எழுதிய'' கட்டுரைகளும், அவரது ''வாழ்க்கை வரலாறு - சாதனைகளும்'' பள்ளிப் பாட நூல்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது பல கல்வியாளர்களிடையேயும், அரசியல் விமர்சகர்களிடையேயும், பத்திரிக்கையாளர்களிடையேயும் ''சலசலப்பை'' ஏற்படுத்தியிருக்கிறது. தில்லையாடி வள்ளியம்மை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, நாகம்மையார், கண்ணம்மையார், ஆகியோரோடு தமிழகப் புதுமைப் பெண்டிர் வரிசையில் வைத்து பேற்றத்தக்கவர் ஜெயலலிதா என்று அப்பாட நூலில் எழுதப்பட்டுள்ளது. இதுதவிர ஆறாம் வகுப்பு ஆங்கிலப் பாட நூலில் அம்பேத்கார், நேரு ஆகியோருக்கு இணையாக வைத்து ஒரு பகுதியும் உள்ளது.

இதைக் கண்டிப்பவர்கள், காந்தி, நேரு, ராஜாஜி, அம்பேத்கார், பெரியார், காமராஜர், அண்ணா போன்ற மறைந்த தலைவர்களின் வரிசையில் ஜெயலலிதா வாழ்க்கை வரலாற்றையும் அவசர கோலத்தில் வைப்பது தவறு; பாடப் புத்தகங்களில் தமிழகத்தின் வரலாற்று நாயகர்களையும் கலாச்சார மேதைகளையும் இலக்கிய கர்த்தாக்களையும் சித்தரிக்கும் கருத்தோவியங்கள் இடம் பெறுவதுதான் முறையானது; சர்ச்சைக்குரிய அரசியல்வாதிகளின் சித்திரத்தைக் குழந்தைகள் மனத்தில் அழுத்தமாகப் பதியும் வகையில் வைப்பது முறையல்ல. இவர்கள் பொது வாழ்வை ஒருவித தொழிலாகவும், வர்த்தகமாகவும் நடத்திக் கொண்டு புகழுக்காக விளம்பரம் செய்பவர்கள் - என்பது இதற்கு எதிராக எதிர்க்கட்சிகளும் பத்திரிக்கைகளும் வைக்கும் விமர்சனம்.

இதுவரையிலான பள்ளி - கல்லூரிப் பாடங்களில் இடம் பெற்ற சமூக, அரசியல், வரலாற்றுக் கண்ணோட்டங்கள் சரியானவைகளாக இருந்ததாகவும், இப்போது ஜெயலலிதாவின் ''வாழ்வும், சாதனைகளும்'' சேர்க்கப்பட்டதுதான் பொருத்தமற்றது என்பதும் இவர்களின் வாதம். இது உண்மையல்ல. ஆளும் வர்க்கங்களும், அவர்களின் அரசும், ஆட்சிக்கு வரும் கூட்டத்தாரும் வரலாற்றைத் திரித்துப் புரட்டி எழுதி வைப்பதே வரலாறாக உள்ளது. நமது நாட்டின் அதிகார பூர்வமான வரலாறு பார்ப்பன சனாதன வருணாசிரம சாதிய தர்மத்துக்காகப் போரிட்ட சத்திரியர்களின் வரலாறாகவே உள்ளது. இராஜ புத்ர மன்னர்களானாலும் , மொகலாயப் பேரரசர்கள் - நவாப்புகளானாலும், அவர்களின் ஆடம்பர, உல்லாச, உப்பரிகை வாழ்க்கையும் சில சில்லரைப் பொதுப்பணிகளும் ஆக்கிரமிப்புப் போர்களும் போற்றப்படுகின்றன; அவர்களது போர்வெறியும், கொடூரமான அடக்குமுறை அட்டூழியங்களும் மூடிமறைக்கப்படுகின்றன. போர்கள் பல நடத்தி சூறையாடிய செல்வங்களையும் விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்த சொத்துக்களையும் அடிமைகளையும் வைத்து தஞ்சையில் பெரிய கோவில் கட்டியதோடு, விலைமாதர்களின் வீதியையும் உருவாக்கிய ராஜராஜசோழனின் அருமை பெருமைகளை போற்றுவதும், பாடமாக வைப்பதும் நடக்கிறது.

ஏகாதிபத்திய, தரகு முதலாளிய, நிலப்பிரபுத்துவ நலன்களுக்காக விடுதலைப் போராட்டத்தில் புகுந்து துரோகமிழைத்த காந்தி, அவரது வாரிசுகள்; சோசலிசப் பித்தலாட்டம் புரிந்து பரம்பரை ஆட்சியை நிறுவிய நேரு; பாசிச, லஞ்ச ஊழல், அதிகாரமுறைகேடுகள், ஆக்கிரமிப்புப் போர்களை நடத்தி நாட்டை மீள முடியாத அரசியல் பொருளாதார நெருக்கடியில் மூழ்கடித்த இந்திரா, ராஜீவ்; தரகு முதலாளிகளின் விருந்தினர் மாளிகைகளிலும் நில முதலைகளின் பண்ணை வீடுகளிலும் இருந்து சாதி அரசியல் நடத்திய ராஜாஜி, காமராஜர்; கவர்ச்சிவாத - பிழைப்புவாத அரசியல் நாயகர்களான அண்ணாதுரை, எம்.ஜி.ஆர். ஆகியோர் வாழ்க்கையும் திரித்து ''ஆதர்ஷ புருஷர்'களாக்கப்பட்டுள்ளனர். அவரவர் காலத்து அரசியலை ஆதாரமாக வைத்து ஆராய்ந்தால் வரலாற்றில் சித்தரிக்கப்பட்டிருப்பதற்கு மாறான, முரணான பல உண்மைகளே தெரிகின்றன. சமீப காலத்தில் அதிகாரபூர்வ அங்கீகாரம் பெற்ற சமூக சீர்திருத்தவாதிகளான அம்பேத்கார், பெரியாரின் வரலாறுகூட அவர்களது சுய முரண்பாடுகள், சமரசங்கள் மூடி மறைக்கப்பட்டு மிகப் பெரும் சமூகப் புரட்சியாளர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இப்படி அதிகாரத்தைக் கைப்பற்றுபவர்கள், தமது கண்ணோட்டத்திற்கேற்ப வரலாற்றைத் திரித்துப் புரட்டுவது ஒன்றும் புதிதல்ல. இதேபோன்று வடக்கு, மேற்கு மாநிலங்களில் ஆட்சியைப் பிடித்த இந்து மதவெறி பாசிஸ்டுகளும் செய்தனர். மேற்கு வங்கத்தில் ஆட்சி நடத்தும் போலி மார்க்சிஸ்ட் ஜோதிபாசுவைத் துதிபாடும் பாடமும் அங்கு வைக்கப்பட்டுள்ளது. ஆனால் நமது கண்முன்னே கொஞ்சமும் நியாயப்படுத்த முடியாத அருவெறுக்கத்தக்க ஆட்சி நடத்துவதால், நிகழ்கால வரலாற்றில் ஜெயலலிதா இடம் பெறக்கூடாது என்கின்றனர்; ''செத்தவர்கள் எல்லாம் விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட தெய்வங்கள்'' என்ற எழுதப்படாத அரசியல் விதிப்படி பின்னர் சேர்ப்பதற்கு இவர்களே மறுக்க மாட்டார்கள். ஆனால் இத்தகைய இழிந்த தலைவர்களின் அதிகாரத்தை இந்தச் சமுதாயம் ஏற்றுக் கொண்டிருந்தது என்கிற வரலாற்று உண்மையை அழித்துவிட முடியுமா? முடியாது. கவர்ச்சிவாத - பிழைப்புவாத பொறுக்கி அரசியலின் நாயகி, கிரிமினல்மயமான, ஆபாசமயமான அரசியலின் வீராங்கனை ஜெயலலிதா என்கிற வரலாறு தமிழ் மக்களுக்குக் கட்டாயம் பாடமாக வைக்கப்பட வேண்டும். இதேபோன்ற உண்மை சித்திரங்களுடன் எல்லாத் தலைவர்களின் வரலாறும் திருத்தி எழுதப்பட வேண்டும். இதே குறிப்புகளுடன் நாடு முழுவதும் உள்ள அவர்களது நினைவுச் சின்னங்கள் வரலாற்று அருங்காட்சியகத்தில் வைக்கப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# பொது சிவில் சட்டம் மாயையும் உண்மையும்

— சூரியன் —

பொது சிவில் சட்டம் என்று வழங்கப்படும் 'ஒரு சீரான உரிமையியல் சட்டம்' (Uniform Civil Code) குறித்த விவாதம் மீண்டும் எழுந்துள்ளது.

பதினான்கு வயதில் ஒரு மகனையும், இரண்டு பெண்களையும் உடைய ஜிதேந்திர மாதுர் என்ற நபர் தனது மனைவி மீனாவை மணவிலக்கு செய்யாமலேயே சுனிதா என்ற இன்னொரு பெண்ணை மணந்து கொண்டார்.

இருந்தாலும் இருதார மணக்குற்றத்துக்காக இவர் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காரணம், இரண்டாவது திருமணம் செய்வதற்கு முன்னால் ஜிதேந்திர மாதுர் அப்துல்லாகானாக மதம் மாறிவிட்டார்; தான் மணக்கவிருந்த சுனிதாவை பேகம்பாத்திமாவாக மதம் மாற்றி டெல்லி ஜும்மா மசூதியில் வைத்துத் திருமணமும் செய்து கொண்டு விட்டார். இந்த விவகாரம் எதுவுமே முதல் மனைவி மீனாவுக்குத் தெரியாது.

''அன்று காலை இருவருமாக வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோது திடீரென ஒரு காகிதத்தை என் கையில் கொடுத்தார். அது அவருடைய இரண்டாவது திருமணத்தின் (நிக்காஹ்) பதிவுச் சான்றிதழ். அதிர்ச்சியில் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை'' என்றார் மீனா.

தான் முஸ்லீமாக மதம் மாறிவிட்டதால் இரண்டாவது திருமணம் செய்து கொள்வது தனது சட்டபூர்வ உரிமை என்பது ஜிதேந்திர மாதுரின் வாதம். இந்த 'நிக்காஹ்' செல்லாது என அறிவிக்கக் கோரி மீனா தொடுத்த வழக்கில் 8 ஆண்டுகளுக்குப் பிறகு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்துள்ளது. இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்திற்காகவே இஸ்லாமுக்கு மதம் மாறியுள்ளதால் இந்தத் திருமணம் செல்லாது என்றும், முஸ்லீமாக மதம் மாறியிருந்தாலும் முதல் மனைவியை மணவிலக்கு செய்யாமல் இரண்டாவது திருமணம் செய்யவியலாது என்றும் நீதிபதி குல்தீப் சிங், நீதிபதி சஹாய் ஆகியோர் அடங்கிய 'பெஞ்ச்' தீர்ப்பளித்துள்ளது.

இந்தத் தீர்ப்பைப் பொருத்தவரை, இதை முஸ்லீம் மதத் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் வரவேற்றுள்ளனர். தீர்ப்பின் இணைப்பாக ''பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவர மத்திய அரசு முயல வேண்டும் என்றும், அரசியல் சட்டத்தின் வழிகாட்டுதல் கோட்பாடு தந்துள்ள இந்த வாக்குறுதியை அமல்படுத்த வேண்டும்'' என்றும் நீதிபதி குறிப்பிட்டிருப்பது பொது சிவில் சட்டம் குறித்த விவாதத்தை மீண்டும் கிளப்பியிருக்கிறது.

பாபர் மசூதியின் இடிபாடுகளின் மீது சீந்துவாரின்றி நின்று கொண்டிருக்கும் ராமபிரானால் வருகின்ற பொதுத் தேர்தலில் தனக்குப் பயன் ஒன்றும் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட அத்வானி, இப்போது பொது சிவில் சட்டம் குறித்து சண்டமாருதம் செய்யத் துவங்கியுள்ளார். தாங்கள் ஆட்சி செய்யும் 3 மாநிலங்களில் மட்டுமாவது இதை அமல்படுத்த முடியுமா என்று சட்ட வல்லுனர்கள் ஆலோசித்து வருவதாகக் கூறியிருக்கிறார்.

பத்து ஆண்டுகளுக்கு முன் ''ஷா பானு' வழக்கில் வந்த தீர்ப்பிற்கு எதிராக முஸ்லீம் மதவாதிகள் தொடுத்த தாக்குதலுக்கு ராஜீவ் அரசு பணிந்தது. ''முஸ்லீம்களை ராஜீவ் அரசு தாஜா செய்கிறது'' என்று பாரதீய ஜனதா கும்பல் குற்றம் சாட்டியவுடனே அதைச் சமாளிப்பதற்காக பூட்டிக்கிடந்த பாபர் மசூதியை இந்துக்களின் வழிபாட்டுக்குத் திறந்துவிட்டு ராமஜென்மபூமி விவகாரத்துக்கு உயிரூட்டினார் ராஜீவ். பாபர் மசூதி தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது.

தற்போது உச்ச நீதிமன்றத் தீர்ப்பையொட்டித் தன்னைச் சந்தித்த முஸ்லீம் தலைவர்களிடம் ''பொது சிவில் சட்டமெதுவும் கொண்டு வரும் உத்தேசம் அரசுக்கு இல்லை'' என்று வாக்குறுதியளித்திருக்கிறார் நரசிம்மராவ். சிறுபான்மையினரைத் ''தாஜா'' செய்யும் இந்த வாக்குறுதியினால் கோபமடையக்கூடிய இந்து வெறியர்களை சமாதானப்படுத்த ராவ் எதைத் திறந்துவிடுவார் என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

> ''பாபர் மசூதியின் இடிபாடுகளின் மீது நின்று கொண்டிருக்கும் ராமபிரானால் வருகின்ற பொதுத்தேர்தலில் பயன் ஒன்றும் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட அத்வானி, இப்போது பொது சிவில் சட்டம் குறித்து சண்டமாருதம் செய்யத் துவங்கியுள்ளார்''.

மதத்தின் அடிப்படையிலான வெவ்வேறு தனிநபர் சட்டங்கள் தேசத்தின் ஒற்றுமையைக் குலைத்துவிடும் என்று ஒருமைப்பாட்டின் பெயரால் கேள்வி எழுப்புகிறது பாரதீய ஜனதா. இடையிடையே பெண்ணுரிமை பற்றிப் பேசுவதற்கும் அவர்கள் தயங்குவதில்லை.

முஸ்லீம் மதவாதிகளோ ''எமக்கு இறைவன் வகுத்தளித்த சட்டங்களை மாற்றுவதற்கு எந்த மனிதருக்கும் உரிமை இல்லை'' என்கின்றனர். பொதுச் சட்டம் என்ற பெயரில் இந்து சட்டத்தை அனைவரின் மீதும் திணிக்கும் சதியே இது என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பொது சிவில் சட்டமொன்றைக் கொண்டு வருவதற்குரிய இணக்கமான சூழ்நிலை (குறிப்பாக இந்து - முஸ்லீம் உறவில்) இன்னும் உருவாகவில்லையென்றும் அத்தகைய சூழ்நிலை உருவாகும் வரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சிலர் கூறுகின்றனர்.

ஒரு கையில் மசூதிகளை இடிப்பதற்குக் கடப்பாரையையும், இன்னொரு கையில் ''ஒரே நாடு - ஒரே மக்கள் - ஒரே சட்டம்'' என்ற சாட்டைக் குச்சியையும் வைத்திருக்கும் பாரதீய ஜனதா அவ்வப்போது அதைச் சொடுக்குகிறது. உடனே கிளம்புகின்ற முஸ்லீம் தலைவர்களின் எதிர்ப்புக் குரலைக் காட்டி மதசார்பற்ற சிவில் சட்டத்தின் எதிரிகள் முஸ்லீம்கள் மட்டும்தான் என்று நிறுவுகிறது. பாரதீய ஜனதா மட்டுமல்ல, மீனாவின் வழக்கில் தீர்ப்பு

படிப்பகம்

www.padippakam.com

கூறிய நீதிபதி குல்தீப் சிங்கும் இதையே தான் கூறுகிறார்.

''இந்தியாவுக்குள்ளே இரண்டு தேசங்கள் அல்லது மூன்று தேசங்களாக வாழ்வது குறித்த கோட்பாடுகளையெல்லாம் இந்தியத் தலைவர்கள் ஏற்கவில்லை என்பதும், இந்தியக் குடியரசு என்பது ஒரே தேசம்தான் - இந்தியத் தேசம்தான் - என்பதும், அதில் எந்த சமூகத்தினரும் மதத்தின் அடிப்படையில் தனித்தன்மையெதையும் கோர முடியாது என்பதும், பிரிவினைக்குப் பிறகு இந்தியாவிலேயே தங்கிவிடுவது என்று முடிவு செய்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்... இந்துக்களும், சீக்கியர்களும், பவுத்தர்களும், ஜைனர்களும் இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்காகத் தங்கள் மத உணர்வுகளைத் தியாகம் செய்திருக்கிறார்கள். சில சமூகத்தினர்தான் அவ்வாறு விட்டுக் கொடுக்க மறுக்கிறார்கள்.''

மத உரிமை, பெண்ணுரிமை, சொத்துரிமை, குடும்பம் ஆகியவை தொடர்பான பிரச்சினை இந்திய ஒருமைப்பாடு குறித்த பிரச்சினையாக மாறிவிட்டது. பொது சிவில் சட்டத்தை ஏற்றுக் கொள்வதன் வாயிலாக சிறுபான்மை மதத்தினர் (முஸ்லீம்களும் கிறித்தவர்களும்) தங்கள் நாட்டுப் பற்றை நிரூபிக்க வேண்டுமென்ற பாரதீய ஜனதாவின் விஷமப் பிரசாரம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினால் புனிதப்படுத்தப்பட்டுவிட்டது.

இத்தனை விவாதங்களுக்கு உட்படுத்தப்படும் பொது சிவில் சட்டம் என்பதுதான் என்ன?

- எந்தவொரு ஆணோ பெண்ணோ, அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் மதம் மாறாமலேயே திருமணம் செய்து கொள்ளும் உரிமை.
- ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமணக் கொள்கை இவற்றுக்கெதிராக மதங்கள் வழங்கும் சலுகைகளை நிராகரித்தல்.
- ஆண், பெண் இருவரின் ஒப்புதலும் இருப்பின் நீதிமன்றத்தில் மணவிலக்கு பெறும் உரிமை.
- கணவனால் மணவிலக்கு செய்யப்பட்ட மனைவியும், குழந்தைகளும் அவனிடமிருந்து ஜீவனாம்சம் பெறும் உரிமை.
- பருவம் வராத சிறுவர்/சிறுமிகளுக்கு பெற்றோர்களே காப்பாளர்கள் என்ற மதச் சட்டங்களுக்கு மாறாக, அச்சிறுவர்களின் நலனில் அக்கறை கொண்ட வேறு யாரையேனும் கூட நியமிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம்.
- சொத்து மற்றும் பாரம்பரியச் சொத்துகளில் ஆண் பெண் இருபாலருக்கும் சம உரிமை.
- மணமான அல்லது மணமாகாத எந்தவொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தையொன்றைத் தத்து எடுத்துக் கொள்ள சட்டபூர்வமான உரிமை.

மதசார்பின்மைக் கோட்பாட்டின் தொடர்ச்சியாக மேற்கத்திய அரசுகள் கொண்டு வந்த, மேற்கூறிய அம்சங்களைக் கொண்ட ''குடிமக்கள் அனைவர்க்குமான பொது சிவில் சட்டம்'' என்பது திருமணம், சொத்துரிமை, மற்றும் குடும்ப விவகாரங்கள் அனைத்திலும் மதத்தின் அதிகாரத்தைப் பறிக்கிறது; மத சார்பற்ற அரசு அவற்றைத் தன் கையில் எடுத்துக் கொள்கிறது.

இத்தகையதொரு பொது சிவில் சட்டத்துடன் முஸ்லீம் தனிநபர் சட்டம் மட்டுமல்ல, தற்போது அமலில் உள்ள இந்து கிறித்துவ, பார்சி தனிநபர் சட்டங்கள் அனைத்துமே வெவ்வேறு அளவில் முரண்படுகின்றன.

ஆனால் அத்வானியின் சீடர்கள் பொது சிவில் சட்டத்திற்குத் தரும் விளக்கம் மிகவும் சுருக்கமானது: ''முஸ்லீம் நாலு பொண்டாட்டி வச்சிக்கலாம்; 'நமக்கு' அந்த உரிமை இல்லை. அவன் 'தலாக் தலாக் தலாக்'னு சொன்னாப் போதும் உடனே விவாகரத்து. நாம் கோர்ட்டுக்கு அலையணும். அதென்ன அவனுக்கு மட்டும் தனி சட்டம்?''

> ''முஸ்லீம் மதவாதிகளோ எமக்கு இறைவன் வகுத்தளித்த சட்டங்களை மாற்றுவதற்கு எந்த மனிதருக்கும் உரிமை இல்லை என்கின்றனர். பொதுச் சட்டம் என்ற பெயரில் இந்து சட்டத்தை அனைவரின் மீதும் திணிக்கும் சதியே இது என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.''

நியாயமாக இந்தக் கேள்வி முஸ்லீம் பெண்களிடம் எழுப்பப்பட வேண்டும். முஸ்லீம் தனிநபர் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள்தான். பாரதீய ஜனதாவிற்குத் தங்கள் மேல் தோன்றியுள்ள திடீர்க் கரிசனையை நம்புவதற்கு அவர்கள் தயாராக இல்லை என்பது ஒரு புறமிருக்க, பாரதீய ஜனதாவும் இப்பிரச்சாரத்தை அவர்களிடம் கொண்டு செல்வதில்லை. மாறாக, மேற்படி 'உரிமைகளில்லாத' இந்து ஆண்களிடம்தான் கொண்டு செல்கிறது. அதன் நோக்கமும் கண்ணோட்டமும் இதன் மூலம் அம்பலமாகிறது.

இது ஒருபுறமிருக்க, **'நமக்குள்ளேயே'** இந்து சட்டம் விதித்திருக்கும் ஏற்றத்தாழ்வுகள் பற்றியும், நம்முடைய சட்டத்தில் அசிங்கமாக வெளிப்படும் சாதி ஆதிக்கம், ஆணாதிக்கம் பற்றியும் பாரதீய ஜனதா பேசுவதில்லை.

வரலாற்றுப் பழி தீர்ப்பதையே தனது முழுமுதற் கொள்கையாக அறிவித்திருக்கும் பாரதீய ஜனதா இந்து சட்டத்தின் வரலாறு பற்றி சாதிக்கும் மவுனம் பொருள் நிறைந்தது. இந்த சட்டத் தொகுப்பின் தயாரிப்பின் போது நடைபெற்ற விவாதங்கள் எந்த அளவு அம்பலமாகின்றதோ, அந்த அளவு பாரதீய ஜனதாவின் இந்து ராஷ்டிரக் கனவு சிதைந்து போகும். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் செயற்கை முறையில் பாராளுமன்ற மண்டபத்திற்குள் 'தயாரிக்கப்பட்ட' இந்துமதத்தின் குட்டு வெளிப்பட்டுப் போகும்.

சாதி ஆதிக்கம் மற்றும் ஆணாதிக்கத்தின் அவமானகரமான சின்னமாகக் காட்சியளித்த இந்து சட்டத்தை சீர்திருத்த அம்பேத்கர் முயன்றபோது அதை மூர்க்கமாக எதிர்த்தவர்கள் பாரதீய ஜனதாவின் மூதாதைகள்தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

'இச்சமூகம் ஒரு இயக்கமற்ற சமூகமாகும். கடவுள் அல்லது சுமிருதிகள்தான் சட்டத்தை உருவாக்க வேண்டும்.. ஆகவே இச்சட்டங்களை மாற்றுவதில் இந்து சமூகத்திற்கு எந்த உரிமையும் இல்லை என்றே இச்சமூகம் நம்பி வந்தது. இதனால்தான் இந்து சமூகத்தில் தலைமுறை தலைமுறையாகச் சட்டங்கள் மாறாமல் இருந்து வந்தன. தங்களின் சமூக, பொருளாதார சட்ட வாழ்க்கையை உருவாக்குவதில் தங்களுக்குள்ள கடமையைப் பற்றி, தங்கள் சொந்த அதிகாரம் பற்றி இச்சமூகம் என்றும் ஒத்துக் கொண்டே இல்லை. முதன் முறையாக இம்மாதிரியான நடவடிக்கைகளுக்கு இந்து சமூகத்தை நாம் தூண்டுகிறோம்'' என்று அரசியல் நிர்ணயசபை விவாதங்களின்போது அம்பேத்கர் குறிப்பிட்டார்.

''கடவுளால் உருவாக்கப்பட்ட சட்டங்களை மாற்றுவதற்கு மனிதனுக்கு உரிமையில்லை'' என்று கூறும் முஸ்லீம் மதவாதிகளை இன்று கேலி செய்கின்ற இந்து மதவாதிகள் தங்கள் முதுகைக் கொஞ்சம் திரும்பிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு தார மணம், ஜீவனாம்சம், பெண்ணுக்கும் சொத்துரிமை, வாரிசுச் சட்டம் திருத்தம் போன்ற சில திருத்தங்களை உள்ளடக்கிய இந்து சட்ட மசோதாவை 1951-இல் நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார் அன்றைய சட்ட அமைச்சர் அம்பேத்கர்.

படிப்பகம்

காங்கிரசுக்குள்ளிருந்த இந்து மகாச பையினரும் சநாதனிகளும் சர்தார் படேலின் தலைமையில் இம்மசோதாவை மூர்க்கமாக எதிர்த்தனர். இம்மசோதா நிறைவேற்றப்பட்டால் தான் ராஜிநாமா செய்துவிடுவதாக மிரட்டினார் ராசேந்திரப் பிரசாத்.

இந்த மசோதா மீதான விவாதத்தையே தடை செய்ய திட்டமிட்ட சநாதனக் கும்பல், எல்லா மதத்தினருக்கும் சேர்த்து பொது சிவில் சட்டம் கொண்டு வரக்கோரி பிரச்சினையை திசை திருப்பியது. அதன் மூலம் முஸ்லீம்களையும் தூண்டிவிட்டு இந்து சட்டத்திற்கு சமாதி கட்ட முயன்றது.

''இந்து சட்ட மசோதாதவை எதிர்ப்பவர்கள் ஒரே நாளில் பொது சிவில் சட்டத்தின் தீவிர ஆதரவாளர்களாக மாறி விட்டது எனக்கு வியப்பளிக்கிறது'' என்று அவர்களின் முகத்திரையைக் கிழித்தார் அம்பேத்கர்.

பலதார மணம், வைப்பாட்டி முறை ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த இந்துப் பெண்களின் நலனை முன்னிட்டு கொண்டு வரப்பட்ட இம்மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்தின் வாயிலில் பெண்களின் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தி அரசை மிரட்டினார்கள்.

பாரதீய ஜனதாவின் மூதாதைகள். அது வரை மசோதாவை ஆதரிப்பதாகக் கூறிய நேரு பல்டியடித்தார்.

திருமணம் மற்றும் மணவிலக்கு பற்றிய பிரிவை மட்டும் ஒரு தனி மசோதாவாக ஆக்கிவிடலமென்றும் மற்றவைகளைக் கைவிட்டு விடலாமென்றும் நேரு முன்வைத்த சமரச யோசனையை அம்பேத்கார் ஏற்றார். ஆனால் மசோதாவின் இந்தப் பகுதிகூட நிறைவேற்றப்பட முடியாமல் கைவிடப்பட்டது. இந்நிலையில் தான் அமைச்சராகத் தொடர்ந்து நீடிப்பதில் அர்த்தமில்லை என்று கூறி பதவியை ராஜினாமா செய்தார் அம்பேத்கர்.

●●●

**த**ற்போது வழக்கில் உள்ள இந்து சட்டம் 1955-56-இல் நிறைவேற்றப்பட்டது. இது மூன்று வகைப்பட்ட விசயங்களைத் தன் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

1. வருண சமூகத்தைக் கட்டிக் காப்பதற்காகவே உருவாக்கப்பட்ட பார்ப்பனீய சட்ட மரபுகளான சுருதிகள், சுமிருதிகள் மற்றும் அவற்றுக்கான விளக்கவுரைகள்.

2. சூத்திரர், தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடி மக்களிடையே நிலவி வரும் மரபுகள்.

3. மேற்கத்திய 'சட்ட மரபுகளான நியாயம் - நீதி - மனசாட்சி, முன்மாதிரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டங்கள்.

**1. சுருதிகள், சுமிருதிகள், விளக்கவுரைகள்:** வேதங்கள் 'ஒலி வடிவில் இறைவனால் முனிவர்களுக்கு அருளப்பட்டவை' என்பதால் சுருதிகள் என்றழைப்படுகின்றன. சுருதி என்ற சொல்லுக்கு 'காதால் கேட்டது' என்று பொருள்.

சுமிருதிகள் என்றால் 'நினைவில் நின்றவை' எனப் பொருள். வேதங்களின் உட்பொருள் குறித்து ஆதிகால முனிவர்கள் அளித்த விளக்கங்களைக் கேட்டு நெஞ்சில் நிறுத்திக் கொண்டவையே சுமிருதிகள். முற்கால சுமிருதிகளுக்கு தரும சூத்திரங்கள் என்றும், 'மனுஸ்மிருதி' போன்ற பிற்கால சுமிருதிகளுக்கு தரும சாத்திரங்கள் என்றும் பெயர்.

தரும சாத்திரங்கள் என்றழைக்கப்படும் இச்சட்டங்கள் நாடெங்கும் ஒரே மாதிரியாக அமல்படுத்தப்படவில்லை. புதிதாக எழுகின்ற பிரச்சினைகளுக்கு ஏற்ப இச்சட்டத்தை எவ்வாறு பிரயோகிப்பது என்பதை விளக்கி எழுதப்பட்ட விளக்கவுரைகள் ஏராளமாக உள்ளன. கி.பி.7-ஆம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை இத்தகைய **விளக்கவுரைகள்** பல எழுதப்பட்டுள்ளன. நால்வருண முறை என்னும் அடிப்படைச் சட்டத்தில் ஒன்றுபட்ட அதேசமயம் மரபுகள், பழக்கங்கள், ஒவ்வொரு வட்டாரமும் சந்திக்கும் சிறப்பான பிரச்சினைகள் ஆகியவற்றுக்கேற்ப இந்த விளக்கவுரைகள் மாறுபட்டன.

**2. சூத்திரர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்கள் மத்தியில் நிலவும் மரபுகள்:** இன்று உருவாக்கப்பட்டுள்ள இந்து மதத்தின் பெரும்பான்மையினராக உள்ள உழைக்கும் மக்களாகிய மேற்கூறியோர் மத்தியில் (ஒவ்வொரு சாதி அல்லது சமூகக் குழுவிற்குள்ளும்) நிலவி வந்த பண்பாடு மேல் வருணத்தாரின் பண்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தது. தனது பண்பாட்டைப் பின்பற்றும்படி முற்காலத்தில் பார்ப்பனீயம் இவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை; மாறாக அவ்வாறு பின்பற்ற முயன்றோரைத் (எ.கா: நந்தன்) தண்டித்தது.

ஆனால் இந்து மதத்தை அனைந்திந்திய ரீதியில் ஒருங்கிணைக்கும் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இப்போது 'கீழ்சாதி மரபு'களையும் இந்து சட்டத்தின் அங்கமாகச் சேர்த்துக் கொண்டது. ஆனால் வேதங்கள், சுமிருதிகளின் அடிப்படையிலான மைய நீரோட்ட இந்து சட்டத்திற்கு இவற்றை அடிப்படையாக ஏற்காமல் 'இழிவான இந்த மரபுகளை' பின்னிணைப்பாக வைத்துக் கொண்டதன் மூலம் பார்ப்பனீயம் தனது 'புனிதத்தை'க் காப்பாற்றிக் கொண்டது.




**3. மேற்கத்திய சட்ட மரபுகள்:** நவீன சமூகம் தோற்றுவிக்கும் பிரச்சினைகளுக்கு சுமிருதிகளில் விடைதேடவியலாது என்பதை இந்து சட்டத்தை உருவாக்கியவர்கள் புரிந்திருந்தனர். எனவே மதசார்பின்மை என்னும் உள்ளடக்கத்தை நீக்கிவிட்டு, மேற்கத்திய சட்ட மரபின் வடிவத்தை அவர்கள் இந்து சட்டத்தின் அடிப்படையாகச் சேர்த்துக் கொண்டனர். பாராளுமன்ற ஜனநாயகம் என்ற புதிய வரைவுச் சட்டத்திற்கேற்ப புதியதொரு இந்து மதத்தை உருவாக்க இது அவசியமாக இருந்தது.

ஆசை வார்த்தைகள், மன்னர் - மானியம் பதவிகள், அச்சுறுத்தல்கள் மற்றும் ஆக்கிரமிப்பு ஆகிய நான்கு உபா


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

யங்களையும் கடைப்பிடித்து 'இரும்பு மனிதர்' இந்தியாவை உருவாக்கிவிட்டார். ஆனால் இந்து மதத்தை ஒருங்கிணைத்து புத்துருவாக்கம் செய்வது இந்தியாவை உருவாக்குவதைக் காட்டிலும் கடினமான பணியாக இருந்தது.

தனது வாள் முனையில் இந்தியாவை ஒன்றுபடுத்திய பிரிட்டிஷ் ஆட்சியின் பேனா முனையே ஒருங்கிணைந்த இந்து சட்டத்தை உருவாக்க முடியவில்லை. அந்தந்த வட்டாரத்தில் என்ன தரும சாத்திரங்கள் வழக்கில் உள்ளனவோ அவற்றிற்கு பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் விளக்கம் கூறும் அதிகாரம் பார்ப்பனப் பண்டிதர்களுக்கே இருந்தது.

'சுதந்திர ஜனநாயக' இந்தியாவில் இந்த முறையைத் தொடர முடியாதென்பதால் ஒரே சுமிருதியையும், அதற்கு விளக்கம் சொல்ல ஒரே பண்டிதரையும் உருவாக்கும் பணியை இந்து சட்டத் தொகுப்பை உருவாக்கிய சநாதனிகள் மேற்கொண்டனர். (இவ்வாறு தொகுக்கும் போது அடிப்படையான வருண தரும நெறிகளுக்கு ஊறு வந்துவிடக் கூடாதேயென்று திரைமறைவில் காஞ்சி சங்கராச்சாரி செய்த சித்துவேலைகளை வீரமணி அவர்கள் தனி நூலில் அம்பலப் படுத்தியுள்ளார்) ஒருவாறாக இந்து சட்டத் தொகுப்பு எனும் 'ஒருங்கிணைந்த சுமிருதி' உருவாக்கப்பட்டது. அதற்கு விளக்கமளிக்க இறுதி அதிகாரம் படைத்த பார்ப்பனப் பண்டிதராக உச்ச நீதிமன்றம் 'நியமனம்' பெற்றது.

அம்பேத்கரின் ராஜினாமாவுக்குப் பிறகு, இந்து திருமணச் சட்டம் (1955), இந்து தத்தெடுத்தல் மற்றும் பராமரிப்புச் சட்டம் (1955) (1956), இந்து வாரிசுரிமைச் சட்டம் (1956), இந்து காப்பாளர் சட்டம் (1956) ஆகியவை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டன.

1955-56-இல் இந்துக்களுக்கான உரிமையியல் சட்டத் தொகுப்புகள் நிறைவேற்றப்பட்டுவிட்ட போதிலும் ஒரு மதம் என்ற முறையில் இந்து மதம் வரையறுக்கப்படாமலேயே இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறினால் இந்துக்களுக்கான சட்டம் தயார் நிலையில் இருந்தது. ஆனால் ''யார் இந்து?'' என்ற பிரச்சினை தீர்க்கப்படாமலேயே நீடித்தது.

இந்த கோமாளித்தனமான சூழ்லையிலிருந்து தப்பிக்க ஒரு குயுக்தியான தீர்வு கண்டுபிடிக்கப்பட்டது.

''யார் இந்து?

யாருக்கெல்லாம் 'இந்து சட்டத் தொகுப்பு' பொருந்துமோ அவர்களெல்லாம் இந்துக்கள்.

யாருக்கெல்லாம் இந்து சட்டத் தொகுப்பு பொருந்தும்?

யாருக்கெல்லாம் இந்து சட்டத் தொகுப்பு பொருந்தாதோ, அவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோருக்கும் பொருந்தும்.

யாருக்குப் பொருந்தாது?

முஸ்லீம்கள், யூதர்கள், பார்சிகள், கிறித்தவர்களுக்குப் பொருந்தாது.

ஆகையினால் இவர்களைத் தவிர அனைவரும் சட்டப்படி இந்துக்களே''

இந்து சட்டத் தொகுப்பு (1955-56) மேற்கூறிய விளக்கத்தின் அடிப்படையில்தான் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே ''இந்துக்கள், சமணர்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள் ஆகியோர் மதத்தால் இந்துக்களே. அந்த இந்து பெற்றோருக்குப் பிறந்தவர்கள் பிறப்பால் இந்துக்கள். முஸ்லீம், கிறித்தவ, யூத, பார்சி மதங்களைச் சாராத மற்றவர்கள் அனைவரும் கூட இந்துக்களே. இவர்கள் அனைவருக்கும் இந்து சட்டத் தொகுப்பு பொருந்தும்'' என்றது உச்ச நீதிமன்றம்.

> ''பலதார மணம், வைப்பாட்டி முறை ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த இந்துப் பெண்களின் நலனை முன்னிட்டு கொண்டு வரப்பட்ட இந்து சட்ட மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்தின் வாயிலில் பெண்களின் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தி அரசை மிரட்டினார்கள், பாரதீய ஜனதாவின் மூதாதைகள்.''

> நான்கு உபாயங்களையும் கடைப்பிடித்து இரும்பு மனிதர் இந்தியாவை உருவாக்கிவிட்டார். ஆனால் இந்து மதத்தை ஒருங்கிணைத்து புத்துருவாக்கம் செய்வது இந்தியாவை உருவாக்குவதைக் காட்டிலும் கடினமான பணியாக இருந்தது''.

பல்வேறு வழக்குகளில் முரண்பட்ட பல காரணங்களுக்காக ''நாங்கள் இந்து இல்லை'' என்று வாதாடியவர்களை மறுத்து அவர்கள் நெற்றியில் இந்துப் பட்டம் கட்டி திருப்பியனுப்பியது உச்ச நீதிமன்றம்.

''இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டு அதை நடைமுறையில் கடைப்பிடித்து தான் ஒரு இந்து என்று அறிவித்துக் கொள்பவன் இந்துதான். அதேநேரத்தில் ஒருவன் நாத்திகனாகிவிடுவதாலோ, இந்து மதக் கோட்பாடுகளைக் கைவிடுவதாலோ, மேலை நாகரீகத்தைப் பின்பற்றுவதாலோ, மாட்டுக்கறி தின்பதாலோ அவன் இந்து இல்லை என்று கூறிவிட முடியாது'' 1963-இல் அளித்த ஒரு தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் இவ்வாறு குறிப்பிட்டது.

இந்து சட்டத் தொகுப்பிற்கு ஆதாரமாக விளங்கும் தரும சாத்திரங்கள் எதுவும் பிற மதத்தினர் இந்துவாக மதம் மாறுவதை அனுமதிக்கவில்லை. அவை வருணப் பிறப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. பிற மதத்தினரை இந்துவாக மதம் மாற்ற தூய்மைப்படுத்தும் சடங்கு ஒன்றை ஆர்யசமாஜம் அறிமுகம் செய்தது. எனினும் இது தரும சாத்திரங்களால் அங்கீகரிக்கப்பட்டது அல்ல.

1975-இல் கேரள உயர் நீதிமன்றம் இப்பிரச்சினையில் புதிய தீர்ப்பு ஒன்றை அளித்தது:

''இந்துக்கள் அல்லாதார் உள்ளே வரக்கூடாது'' என்ற அறிவிப்புப் பலகையை பல கோயில்களில் வாசகர்கள் கண்டிருக்கக் கூடும். இவ்விதியின் அடிப்படையில் பின்னணிப் பாடகர் ஜேசுதாஸ் குருவாயூர் கோயிலில் வழிபாடு செய்ய கோயில் நிர்வாகம் அனுமதி மறுத்தது. ஜேசுதாஸ் இதை எதிர்த்து வழக்கு தொடுத்தார். பிறப்பால் கத்தோலிக்க கிறித்தவரான அவர் ''நான் இந்து மதத்தைப் பின்பற்றுபவன்'' என்று நீதிமன்றத்தில் அறிவித்தார்.

''தான் இந்து மதத்தைப் பின்பற்றுபவன் என்று ஒருவர் அறிவிக்கும் பட்சத்தில், தீய உள்நோக்கங்கள் ஏதுமின்றி நல்ல எண்ணத்துடன் அவ்வறிவிப்பு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர் இறைவன் குறித்த இந்துக் கண்ணோட்டத்தை ஏற்றுக் கொண்டவராகிறார். எனவே அவர் இந்துவாக மதம் மாறிவிட்டார் என்று பொருள்.''

கேரள உயர் நீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பு மேல் பார்வைக்கு 'அதி புரட்சிகரமானதாகத்' தென்பட்டாலும், இந்துமத விரிவாக்கத்திற்குத் துணை செய்யும் ஒரு எளிய 'சம்பிரதாயத்தை' இது வகுத்துத் தந்துள்ளது என்பதே

படிப்பகம்

www.padippakam.com

உண்மை.

'தாய் மதத்திற்கு' திரும்பிய ஜேசுதாஸிற்கு இந்து சட்டத் தொகுப்பு என்ன வருணத் தகுதியை வழங்கும்?

''கிறித்தவத்திலிருந்து இந்துமதத்திற்கு மீண்டும் மாறி வந்தவுடன், மறைந்திருந்த அவர்களது உண்மையான சாதி மீண்டும் உயிர்ப்பிக்கப்படும்' என்கிறது உச்ச நீதிமன்றம். அவ்வாறு இந்துவாக மதம் மாறியவருடைய மூதாதையரின் சாதியைக் கண்டு பிடிக்க முடியாமல் போனால் அவர்கள் இந்து சட்டத்தின் முன் சூத்திரர்களாகக் கருதப்படுவார்கள்.

வலையை அகல விரித்து அகப்பட்டவர்களையெல்லாம் இந்து சட்டத் தொகுப்பிற்குள் இழுத்துப் போடும் அரசியல் நோக்கத்திற்காக இந்து சட்டத் தொகுப்பில் பல சமரசங்கள் செய்து கொள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாக,

● தந்தை வழி வாரிசுரிமை மற்றும் கூட்டுக் குடும்பம் என்ற கோட்பாட்டையே இந்து சட்டம் பின்பற்றுகிறது. எனினும் கேரளத்தில் சில சமூகத்தினர் மத்தியில் நிலவும் மருமக்கள் தாயம் மற்றும் அரிய சந்தானம் எனும் தாய்வழிக் குடும்ப முறையும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

● அதேபோல, இந்து சட்டத்தால் தடை செய்யப்பட்ட மண உறவுகளில் (அதாவது சிறிய தந்தையின் மகனை அல்லது மகளை மணம் செய்யக் கூடாது என்பன போன்றவை) பழங்குடியினர் மற்றும் சில சமூகத்தினர் திருமணம் செய்வது நீண்டகால மரபாக இருப்பதால் அதுவும் இந்து சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

● கோவா மாநில இந்துக்களில் சில பிரிவினரிடையே நிலவும் இருதார மணமும் சட்டத்தால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது. ஒருதார மணச் சட்டம் அவர்களுக்குச் செல்லாது.

● அண்ணன் மறைவிற்குப் பின் அவரது மனைவியை தம்பி திருமணம் செய்து கொள்ளலாம் என்ற ஜாட் சாதியினரின் மரபும் இந்து சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒருதார மணச் சட்டம் இங்கேயும் செல்லாது.

● கேரளத்து மாப்ளா முஸ்லீம்களும், சித்தூர் மாவட்ட கிறித்தவர்களில் சிலரும் (வன்னியர்கள்) வாரிசுரிமை குறித்த பிரச்சினையில் மட்டும் அவர்களது மரபுப்படி இன்றும் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ்தான் வருகின்றனர்.

தனது பண்பாட்டுக்கு எள்ளளவும் தொடர்பற்ற குலமரபுகளையும், பண்பாடுகளையும் இந்து சட்டத் தொகுப்பிற்குள் பார்ப்பனீயம் ஏன் அனுமதித்தது என்ற கேள்வி இங்கே எழலாம். மரபுகள் மற்றும் பண்பாடுகள் விசயத்தில் பார்ப்பனீயம் தனக்குள்ளேயே வட்டார ரீதியாக பிளவுபட்டிருந்தது. மேலும் பார்ப்பனீயப் பண்பாட்டின் எல்லைக்கு வெளியே இருந்த பலதரப்பட்ட ஒடுக்கப்பட்ட சாதியினரின் உட்குழுப் பண்பாட்டில் 'வரம்பு' மீறித் தலையிடுவதன் மூலம் 'இந்து ஒற்றுமை' என்ற தனது அரசியல் நோக்கத்திற்குக் கேடு விளைவித்துக் கொள்ள இந்திய ஆளும் வர்க்கம் விரும்பவில்லை.

ஆனால் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள் மத்தியில் நிலவிவந்த ஜனநாயக பூர்வமான மரபுகளின் மீதும் தான் கொண்டுள்ள வெறுப்பையும் அது மறைத்துக் கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக மக்கள் மத்தியில் நிலவி வந்த (இன்னமும் நிலவி வரும்) சிக்கலில்லாத எளிய 'மணவிலக்கு' முறையை ஒழுக்கக் கேட்டின் அடிப்படையாகப் பார்ப்பனீயம் கருதியது. மணவிலக்கிற்கு நீதிமன்றங்களின் தயவை நாடி அலைய வைப்பதன் மூலம் அவர்கள் மீது 'நல்லொழுக்கத்தை'த் திணித்துவிடலாம் என்றும் கருதியது. இந்த வகையில் தலையிட்டு அவர்களை இந்து மயமாக்க முயன்றது.

எனினும், மரபு என்ற விசயத்தில், தனது தலைமையை நேருக்கு நேர் எதிர்க்கின்ற எதையும் அனுமதிக்க பார்ப்பனீயம் தயாராக இல்லை.

தி.மு.க. ஆட்சியில் 1969-இல் சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு **அந்த மண முறையின் கீழ் செய்யப்படும் திருமணம் பதிவு செய்யப்படாவிட்டாலும் செல்லும்** என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. (சுயமரியாதைத் திருமணமும் இந்து சட்டத் தொகுப்பின் கீழ்தான் வருகிறது) ஆனால் இச்சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன் இத்திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் கிடையாது.

1954-இல் இது தொடர்பான வழக்கு முதன்முதலாக நீதிமன்றத்தின் முன் வந்தது. ''பார்ப்பனியச் சடங்குகளை மறுக்கும் இந்த மணமுறை 1925 முதலே கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் இதையும் ஒரு மரபாக அங்கீகரிக்க வேண்டும்'' என சுயமரியாதை இயக்கத்தினர் வாதாடியிருக்கின்றனர். ''இந்த மணமுறை 25 ஆண்டுகளாகத்தான் பழக்கத்திலிருக்கிறது; எனவே இந்த பழக்கத்தை ஒரு மரபு என்று அங்கீகரிக்க முடியாது'' என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1966-இல் இதே விசயத்திற்காக இன்னொரு வழக்கு விசாரணைக்கு வந்த போது நீதிமன்றம் இன்னும் ஒருபடி மேலே சென்றது. ''நவீன காலத்தில் ஆளாளுக்கு ஒரு சட்டத்தையோ மரபையோ உருவாக்க முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மன்றம்தான் அதைச் செய்ய முடியும்'' என்று தீர்ப்பளித்தது.

ஜேசுதாஸின் மதமாற்றத்திற்கு ஒரு புதிய 'சம்பிரதாயத்தை' உருவாக்கிய நீதிமன்றம் அதே உரிமையை மக்களுக்கு மறுத்தபோது அதற்காகச் சிறிதும் வெட்கப்படவில்லை. ஏனென்றால் அது இந்து சட்டத்தொகுப்பின் உணர்ச்சியின்படி நடந்து கொண்டது.

தரும சாத்திரங்களுக்கு விளக்கவுரை தரும் பார்ப்பனப் பண்டிதராக அமர்த்தப்பட்ட நீதிமன்றம், தனக்களிக்கப்பட்டுள்ள கடமையின் புனிதத்தையும், அரசியல் நோக்கத்தையும் தெளிவாக விளங்கிக் கொண்டிருந்தது என்பதை அதன் எண்ணிறந்த தீர்ப்புகள் பிரதிபலிக்கின்றன.

இந்து சட்டத் தொகுப்பின் ஜனநாயகத் தன்மை குறித்த மாயை கலைய வேண்டுமானால் அதன் உண்மை நிலை குறித்த சில விவரங்களையாவது தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

---

## பெண்ணுரிமைக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ்

**தினமணி செய்தி ஜூலை 6'95**

**தினமணி 59 ஆண்டுகளுக்கு முன்**

6.7.1936 திங்கட்கிழமை

### நாகபுரி கூட்டம் அமளியில் கலைந்தது
### ஹிந்துப் பெண்களின் வாரிசு உரிமை பற்றி ஆட்சேபம்
### சநாதனிகளின் கலாட்டா

நாகபுரி, ஜூலை 6— அசெம்பளியில் டாக்டர் தேஷ்முக் ஹிந்து மாதர் வாரிசு பாத்யதை மசோதா ஒன்றைக் கொண்டு வந்திருக்கின்றார். அந்த மசோதாவுக்கு ஆதரவு தருவதற்காக பெண்கள் மகாநாடு ஆதரவில் நாகபுரியில் சென்ற இரவு ஒரு பொதுக்கூட்டம் நடந்தது.

அக்கூட்டத்தில் ரகளையும் அமளியும் அதிகமாய்த் தென்பட்டன. இக் கூட்டத்துக்கு டாக்டர் கரே தலைமை வகித்தார். யாதொரு தீர்மானமும் நிறைவேற்றப்படாமல் கூட்டம் அமளியில் கலைந்தது.

மசோதா தயாரித்த டாக்டர் தேஷ்முக்கின் சகோதரர் கோவிந்தராவ் தேஷ்முக் ஹிந்து சபா ஊழியர்களால் தாக்கப்பட்டதாகவும் பிறகு மீட்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

● பெண்ணுக்குத் தாய்வீடு நிரந்தர மல்ல என்ற கோட்பாட்டினடிப்படையில் பாரம்பரியச் சொத்தில் பெண்ணின் உரிமையை இந்து வாரிசுரிமைச் சட்டம் மறுக்கிறது. இந்த விசயத்தில் இஸ்லாமிய சட்டம் கொஞ்சம் முற்போக்கானதென சட்ட வல்லுனர்கள் கூறுகின்றனர்.

● பெண்ணின் சொத்துரிமையைப் பறித்ததன் மூலம் இந்து நிலப்பிரபுக்கள் மற்றும் தரகு முதலாளிகளின் சொத்து பிளவுபடாமல் தடுக்கப்பட்டது. மேலும் இந்தப் பிளவுபடாத இந்து / கூட்டுக் குடும்ப சொத்திற்கு பிற மதத்தினர்க்கு இல்லாத விசேட வரிச்சலுகைகளும் தரப்பட்டுள்ளன.

● முதல் மனைவி இருக்கும்போதே ஒரு கணவன் இரண்டாம் தாரமாக ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டு, இது தொடர்பான வழக்கு நீதிமன்றம் செல்லும்போது பெண்ணுக்கு எவ்விதப் பாதுகாப்பும் இருப்பதில்லை. மணப்பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு மணமகன் வேள்வித் தீயைச் சுற்றி ஏழு அடி எடுத்து வைக்கும் 'சப்தபதி' என்ற குறிப்பிட்ட சடங்கு நடைபெறவில்லை என்று ஒரு கணவன் நிரூபித்துவிட்டால், மற்றெல்லாச் சடங்குகளும் நடந்திருந்தாலும் அத்திருமணம் செல்லத் தக்கதல்ல என்று ஏராளமான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.


அம்மியோ, அருந்ததியோ, புரோகிதனோ, தரகனோ, முப்பத்து முக்கோடி தேவர்களோ வந்து சாட்சி கூறியும் பயனில்லை. தலாக் என்று மூன்று முறை சொல்லி மணவிலக்கு செய்யப்படும் இசுலாமியப் பெண்களுக்காகக் கண்ணீர் சிந்தும் பார்ப்பன மதவெறியர்கள் இதுபற்றி வாய் திறப்பதில்லை.

'சப்தபதி நிரூபிக்கப்பட வேண்டியதில்லை' என சமீபத்தில் ஒரு தீர்ப்பு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அவ்வாறிருந்தாலும், சாத்திர சம்பிரதாயங்களின் சந்துகளில் புகுந்து பெண்ணுக்கு அநீதி இழைக்க வழி சொல்லிக் கொடுத்த பார்ப்பனப் பண்டிதர்கள் ஏற்கனவே ஆயிரக்கணக்கான பெண்களின் வாழ்க்கையைச் சூறையாடி விட்டார்கள்.

● குடும்பத்தை நிர்க்கதியாகத் தவிக்கவிட்டு ஓடுபவன், அதே குற்றத்தை துறவறம் என்ற பெயரில் செய்தால் அதை அவனது மத உரிமையாக இந்து சட்டம் அங்கீகரிக்கிறது. அதனடிப்படையில் மணவிலக்கும் வழங்குகிறது.

**பெண்ணினத்திற்கு எதிராகக் கடவுளும் ஆணும் இணைந்து அமைத்த கூட்டணியில் மதவேறுபாடே கிடையாது.**

1929-இல் பிரிட்டிஷாரால் கொண்டுவரப்பட்ட குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம், குறைந்தபட்ச திருமண வயதாக பெண்களுக்கு - 15, ஆண்களுக்கு - 18 என்று நிர்ணயித்தது. 1978-இல் மீண்டும் ஒரு திருத்தத்தின் மூலம் இது 'பெண்களுக்கு - 18, ஆண்களுக்கு - 21 என்று உயர்த்தப்பட்டது.




முன் அட்டை ஓவியம் கரோ

எனினும் இந்தச் சட்டத்தை மீறி பத்து வயது சிறுவனுக்கும் 5 வயது சிறுமிக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டு விட்டாலும் அதை ஏற்பாடு செய்தவர்களுக்கு மூன்று மாத தண்டனையோ 1000 ரூபாய் அபராதமோதான் விதிக்க முடியுமே தவிர "அத்திருமணம் செல்லாது" என எந்த நீதிமன்றமும் அறிவிக்க முடியாது. மத சம்பிரதாயங்களால் உறுதி செய்யப்பட்ட ஒரு திருமணத்தை நீதிமன்றம் ரத்து செய்ய முடியாது என்பதே இந்த அணுகுமுறைக்கான அடிப்படை.

● இந்து திருமணச் சட்டத்தில் மொத்தம் 8 வகைத் திருமணங்கள் பற்றிக் கூறப்படுகின்றன. அவற்றின் **பிரம்ம** வகைப்பட்ட திருமணங்கள் மூன்று **உயர்** வர்ணத்தாருக்கும் **அசுர** வகைப்பட்ட திருமணங்கள் 'சூத்திரர்'க்கும் மனு நீதியால் அனுமதிக்கப்பட்டிருந்தன. பிரம்ம வகைப்பட்ட திருமணங்களை சூத்திரரும் நடத்தலாம் என்ற திருத்தம் பிரிட்டிஷ் ஆட்சியில்தான் அனுமதிக்கப்பட்டது.

பெண்ணுக்கும் அவள் வீட்டாருக்கும் பொருள் தந்து (பரிசம்) பெண்ணை மண முடிப்பது **அசுர** திருமணம் என்றும், பெண்ணுடன் பொன்னையும் பொருளையும் மணமகனுக்குத் தானமாகக் கொடுப்பது (கன்னிகாதானம்) **பிரம்ம வகைப்பட்ட திருமணம் என்றும் மனுநீதி கூறுகிறது. இவை வெறுமனே பழைய ஏட்டுச் சுவடிகளில் இல்லை - இன்றும் இந்து திருமண சட்டத்தின் அடிப்படையாக உள்ளன. சாத்திரம் வரதட்சிணையை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகிறது - சட்டமோ அதைத் தடுப்பதாக முணுமுணுக்கிறது.**

● ஆகம விதிகளால் ஆளப்படும் கோயில்களில் பார்ப்பனரல்லாதாரும், பெண்களும் அர்ச்சகராக முடியாது என்ற நிலைமை இந்து சட்டம் ஏற்றுக் கொள்ளும் மரபால் நியாயப்படுத்தப்படுகிறது; அரசியல் சட்டம் வழங்கும் மத உரிமையால் இதுவே பார்ப்பனர்களின் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்படுகிறது.

● காப்பாளராக இருக்கும் உரிமையைப் பெண்களுக்கு வழங்குதல், மண உறவிற்கு வெளியே பிறந்த குழந்தைகளின் உரிமைகள், சாதி மறுப்புத் திருமணங்கள் ஆகியவற்றில் இந்து சட்டத் தொகுப்பு பெரிதும் அநியாயமாக நடந்து கொள்கிறது என முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணய்யர் போன்றோரே குற்றம் சாட்டுகின்றனர்.

பெண்ணினத்திற்கு எதிராகக் கடவுளும் ஆணும் இணைந்து அமைத்த கூட்டணியில் மதவேறுபாடே கிடையாது. இந்து, கிறித்தவ, இசுலாமிய, யூத, பார்சி மதச் சட்டங்கள் அனைத்துமே பெண்களுக்கு எதிரானவைதான். ஆனால் இவற்றில் இந்து மதம் மட்டும்தான் சாதி ஆதிக்கத்தையும் தனது சட்டத்தால் புனிதப்படுத்துகிறது.

● ● ●

படிப்பகம்

www.padippakam.com

இந்து சட்டத்தின் பிற்போக்குத் தனங்கள் பல சீர்திருத்தப்பட்டுள்ளன என்பது உண்மைதான். ஆனால் அச்சீர்திருத்தங்கள் பார்ப்பன சநாதனிகளால் மனமுவந்து முன்மொழியப்பட்டவை அல்ல. வைப்பாட்டி வைத்துக் கொள்ளும் சட்டபூர்வ உரிமையைக் கூட 1955 வரை அவர்கள் தானாக முன்வந்து கைவிடத் தயாராக இல்லை.

இந்து சட்டத் தொகுப்பிற்காக தரும சாத்திரங்களின் 'காலத்துக்கொவ்வாத' பகுதிகள் சிலவற்றில் மாற்றங்கள் முன்மொழியப்பட்டபோது, அதை எதிர்த்து பார்ப்பன சநாதனி ஒருவர் அங்கே எழுப்பிய ஆட்சேபமே இதற்குச் சான்று:

''தாங்கள் விரும்புவதை அவர்கள் நிறைவேற்றிக் கொள்ளட்டும். நாங்கள் நீதிமன்றங்களைத் தவிர்க்கவே முயல்வோம். 'இந்து சட்ட மசோதா' என்று அழைக்கிறார்களே அதைப் பொருத்த வரை நாங்கள் கூறுவதெல்லாம் இது தான்; எதை வேண்டுமானாலும் சட்டமாக்கிக் கொள்ளுங்கள். ஆனால் தயவு செய்து அதை 'இந்து சட்டம்' என்று மட்டும் அழைக்காதீர்கள். ஏனென்றால் அது இந்து சட்டமே அல்ல.'

அப்படியானால் சநாதனிகளின் விருப்பத்துக்கு எதிராகத் தான் இந்து சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளதா? இது சீர்திருத்த வாதிகளுக்குக் கிடைத்த வெற்றியா? என்ற கேள்விகள் எழலாம். உண்மையில் இது சீர்திருத்தவாதிகளின் வெற்றியுமல்ல, பார்ப்பனீயத்தின் தோல்வியுமல்ல.

> ''சநாதனிகளின் விருப்பத்துக்கு எதிராகத்தான் இந்து சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளதா? இது சீர்திருத்தவாதிகளுக்குக் கிடைத்த வெற்றியா? என்ற கேள்விகள் எழலாம். உண்மையில் இது சீர்திருத்தவாதிகளின் வெற்றியுமல்ல, பார்ப்பனீயத்தின் தோல்வியுமல்ல''.

ஆளும் வர்கத்தின் ஒரு பிரிவினரின் விருப்பமே ஆளும் வர்க்கத்தின் பொது விருப்பமாக ஆகிவிடுவதில்லை. பார்ப்பன வருண தருமத்தை அப்படியே திணிக்க விரும்பிய குருட்டு சநாதனிகளின் விருப்பம், ஆளும் வர்க்கங்களின் அன்றைய நோக்கம், நலன் மற்றும் தேவைக்கு உகந்ததாக இல்லை.

''இந்து மதத்தைப் புத்துருவாக்கம் செய்வது - இந்தியாவை ஒன்றுபடுத்துவது'' என்ற தமது ஒருங்கிணைந்த லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள மேற்படி விருப்பத்தை ஆளும் வர்க்கங்கள் 'தியாகம்', செய்தன, அவ்வளவே.

இந்த 'தியாகத்தை'த் தான் தனது தீர்ப்பில் பாராட்டுகிறார் நீதிபதி குல்தீப் சிங். யாருடைய மன உணர்விலிருந்து இந்தப் பாராட்டுரையை நீதிபதி வழங்கியுள்ளார் என்று புரிந்து கொள்ள வேண்டுமானால் அந்தத் 'தியாகங்களில்' சில வற்றை வாசகர்கள் மீண்டும் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்.

தீண்டாமைக்குத் தடை, தாழ்த்தப்பட்டோர் ஆலய நுழைவு, குழந்தைத் திருமணத் தடை, வரதட்சிணைத் தடை, பலதாரமணத் தடை போன்ற இந்த மதக் கோட்பாடுகளுக்கு எதிரான சட்டங்களை - தாங்கள் மதவுணர்வு பொருட்படுத்தாமல் - அனுமதித்மைக்காக பார்ப்பன உயர்சாதி இந்துக்களுக்கு நன்றி கூறுகிறார் நீதிபதி.

ஆனால் உயர்சாதியினரும், ஆணாதிக்கவாதிகளும் ஜனநாயக உணர்வின் பாற்பட்டு இந்தச் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டனரென்று நீதிபதி குறிப்பிடவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்: தேசிய ஒருமைப்பாட்டுக்காகத் தான் இந்தத் தியாகம் செய்யப்பட்டது என்ற உண்மையை நீதிபதி தெளிவாகவே கூறியிருக்கிறார்.

''அரசு, இந்திய ஆட்சிப்பரப்பு எங்கணும் ஒரு சீரான உரிமையியல் தொகுப்புச் சட்டம் குடிமக்களுக்கு உறுதியாகக் கிடைக்குமாறு பெருமுயற்சி செய்தல் வேண்டும்'' - என்று கூறுகிறது இந்திய அரசியல் சட்டத்தின் 44-வது பிரிவு. (வழிகாட்டும் கோட்பாடு).

விவாகரத்து மற்றும் ஜீவனாம்சம் பற்றிய பிரச்சினைகளில் எல்லா சமூகத்தினரையும் ஒரே சட்டத்தின் கீழ் கொண்டு வருவதன்மூலம் இந்திய ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதுதான் இந்த அரசியல் சட்டப் பிரிவின் நோக்கம் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் பல இந்தச் சட்டப்பிரிவுக்கு விளக்க மளித்துள்ளன.

விவாகரத்துக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் என்ன சம்பந்தம்? ஒரு சீரான விவாகரத்து சட்டத்தை ஒப்புக் கொள்ளாதவன் பிரிவினைவாதியா? இதென்ன மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடும் கதையாக இருக்கிறதே என வாசகர்கள் நினைக்கலாம்.

இந்த முடிச்சை அவிழ்க்கும் போது தான் பாரதீய ஜனதாவின் 'ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே சட்டம்' என்ற முழக்கத்தின் முடிச்சும் அவிழும்.

— அடுத்த இதழில் முடியும்.

இரண்டாமாண்டில் அடிவைக்கிறது
கீழைக்காற்று
புதிய வரவுகள்.

- என்று முடியும் இந்த மொழிப்போர்? - அ. இராமசாமி — ரூ. 30.00
- போராளிகள் காத்திருக்கின்றனர் (நாவல்) - கே. டானியல் — ரூ. 20.00
- காட்-டாட்சி - புதிய ஜனநாயகம் வெளியீடு — ரூ. 30.00
- பெண்களின் சுவடுகளில்... - சாந்தி சச்சிதானந்தம் — ரூ. 20.00
- கப்சிப் தர்பார் - புதுமைப்பித்தன் — ரூ. 20.00

மற்றும்
முற்போக்கு நூல்கள்,
பத்திரிகைகள்,
ஒலி நாடாக்கள்
எமது விற்பனையில்

கீழைக்காற்று
வெளியீட்டகம் - விற்பனையகம்
10, அவுலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை, சென்னை - 2.

## இதழ் விலையேற்ற அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே,

புதிய கலாச்சாரத்தின் விலையை மீண்டும் உயர்த்த வேண்டியுள்ளது. அச்சுத்தாள், வெள்ளைத்தாள் ஆகிய அனைத்தின் விலையும் தாறுமாறாக ஏறிக் கொண்டேயிருக்கின்றன. விலையை மீண்டும் உயர்த்துவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

இந்த இதழிலிருந்து புதிய கலாச்சாரத்தின் விலை ரூ. 4/- வாசகர்களும் முகவர்களும் தொடர்ந்து ஆதரவளிக்கக் கோருகிறோம்.

இவண்
ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# கருப்பு

• சுடர் விழி

சமுதாயத்தில் புரையோடிப் போய் விட்ட கருத்துக்கள், புழுத்து வெளியே வரும் போது அது பண்பாட்டு வியாதியால் பரவுகின்ற வேகம், வேறெதையும் விட கூடுதலானது. அப்படியொரு அனுபவம் சமீபத்தில் சென்னை பேருந்தில் எனக்கு ஏற்பட்டதை உங்களோடு பகிர்ந்தாக வேண்டும். வழக்கம் போல அன்றும், அளவுக்கு மீறிய கூட்டத்தால் மூச்சுத் திணறியது பேருந்து.

ஓட்டுநர், பிரேக்கில் கால் வைக்கும் போதெல்லாம் 'பல்லவ' ராச்சியத்தில் உள்நாட்டு நெருக்கடி விளைந்தது. இடிபாடுகளுக்கிடையே ஒரு பெரியவரும், பெண்மணியும் நெரிசலில் நீந்தி சன்னல் பக்கம் உள்ள இருக்கையோரம் வந்து பெருமூச்சு விட்டனர். 'பிராணம் போச்சுபோ' நொந்து கொண்டார் பெரியவர். ''அடுத்த வண்டிக்கு வரலாம்னா கேக்குறீங்களா?!'' என்று கடிந்து கொண்டார் அந்த பெண்மணி. அவரது மனைவி போலும்!

''பத்து மணிக்கெல்லாம் போனா தான் டாக்டர் இருப்பான்'' என்று முனகிக் கொண்டே பெரியவர் இருக்கையிலிருப்பவர்களின் மேல் தன் பார்வையையே வேண்டுகோளாய்ப் படரவிட்டார். ''இப்படிவா தள்ளி நின்னுக்க'' என மனைவியையும் இன்னொரு இருக்கைக்கு முன்பதிவு நடவடிக்கையாய் வரவழைத்துக் கொண்டார். நெரிசலில் சிக்கிக் கொண்டு அவர் புலம்பிக் கொண்டிருந்தது அனுதாபத்தை ஏற்படுத்த, உட்கார்ந்திருந்த இரண்டு பேர் எழுந்து இடம் கொடுத்தனர். ''ரொம்ப தாங்க்ஸ்'' என்று புன்னகையால் வாழ்த்திவிட்டு மனைவியை சன்னல் பக்கமாய் உட்காரச் சொல்லி அவரும் அமர்ந்தார்.

பாண்டிபஜாரைக் கடக்கையில் இன்னும் கூட்டம் அதிகமாக நின்று கொண்டிருப்பவர்கள் தோளில் உரச எரிச்சல் வந்தது பெரியவருக்கு. கறுத்த முன் நெற்றியில் முடி புரள, வியப்பான பார்வையுடன் குனிந்து வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டே அவரின் மேலே சாய்ந்த அந்த இளைஞனின் உரசல் கூடுதலாய் எரிச்சல் தந்தது பெரியவருக்கு. அவன் மேலே படும்போது அருவருப்போடு நெளிந்து கொண்டு - 'இச்' கொட்டி முறைப்பதும், கூட்டத்தில் அடி எடுத்து வைக்க இயலாதவாறு அந்த இளைஞன் செய்வதறியாது தவிப்பதுமாய் பயணம் தொடர்ந்தது. கூடுமானவரைக்கும் பெரியவரின் மேலே சாய்ந்து விடாதபடிக்கு தன் வத்தலான உடம்பை ஒடுக்கி வைத்து புது கிரகத்துக்கு வந்தவன் போல



வெளியே வெறித்துக் கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

முன் இருக்கையில் அமர்ந்திருப்பவர்களிடம் நேசமாய் பேசிக் கொண்டிருந்த பெரியவரின் பேச்சிலிருந்து அவர் ரிடையர்டு கிளார்க் என்றும், புற்று நோய் சிகிச்சைக்காக அடையாறு போய்க் கொண்டிருக்கிறார் என்றும் தெரிந்து கொள்ள முடிந்தது. சாவகாசமாய் பேசிக் கொண்டிருந்தவர் மேல் அந்த கறுப்புநிற இளைஞன் சாய ''ஒரு தட்வ சொன்னா புரியாது. போப்பா அந்தாண்ட'' என்று எரிச்சலானார் பெரியவர். 'நான் என்ன செய்வது' என்பது மாதிரி விழித்த வண்ணம் பின்னால் கூட்டத்தை ஒருமுறை பார்வையால் சுட்டிக் காட்டியவாறு முரட்டுத் தனமாய் கூட்டத்தை பிளந்து நகர்ந்தான் அவன். ''ஆளையும், மூஞ்சியையும் பாரு, திருட்டுப் பய மாதிரி'' என்று அந்த இளைஞன் நகர்ந்தபிறகு முணகித் தள்ளினார் அவர். ''ஏன் சார் முன்னாடியே சொல்லக் கூடாது'' என்று உதவிக் கரம் நீட்டி பேசிக் கொண்டிருந்தனர் அருகே இருந்தவர்கள். சிறிது நேரம் கழித்து யோசனை வந்தவர் போல சட்டைப்பையை தடவிப் பார்த்த பெரியவர் பையை துழாவிவிட்டு அதிர்ச்சியுடன் மனைவியிடம் ''லெட்சுமி பைல பணத்தைக் காணோம்'' என்று உரக்க கத்த, அந்த பெண்மணிக்கு படபடப்பு அதிகமாகி ''அப்பவே சொன்னேன் இந்த பக்கம் உட்காருங்கண்ணு'' என்று புலம்பினாள். ''அய்யய்யோ எவ்வளவு ரூபா, நல்லா பாருங்க சார்..'' என்று செயற்கையாகப் பதறினார்கள் பக்கத்திலிருந்தவர்கள்.

பெரியவர் ஒரு முடிவுக்கு வந்தவராய், ''சந்தேகமேயில்லை கறுப்பா நின்னாணே அந்தப் பயல்தான் அடிச்சிருப்பான் குனிஞ்சு, குனிஞ்சு இடிச்சிகிட்டிருந்தப்பவே நெனச்சேன்.''

''பண மடிச்சவன் எங்க இருக்கப் போறான். சைதாப்பேட்டையிலேயே எறங்கியிருப்பான் சார். இன்னா சார் இந்த காலத்துலேயும் அசால்ட்டா கீறே'' என தன் பாட்டுக்கு பேசினான் ஒருவன்.

''அவன் திருதிருன்னு முழிச்சிகிட்டு நின்னப்பவே சந்தேகப்பட்டேன். நான்கூட அதுக்குத்தான்தள்ளிப்போடா-ன்னு சொன்னேன்'' என்று வலிய வந்து ஆறுதல் கூறினார்கள் முன்னிருக்கை நபர்கள்.

''அதுக்குத்தான் சார் பக்கத்துல நிக்கற ஆளு ஒரு மாதிரியா இருந்தா, கவனமா இருக்கணும்'' என்று ஆளுக்காள் அந்த கறுத்த இளைஞனை திட்டிய வண்ணம் பேருந்துக்குள் நோட்டம் விட்டனர்.

''அவன் மூஞ்சியும் கொள்ளிக்கட்ட மாதிரி கண்ணும். கொஞ்ச நேரத்துல கொண்ட்டு போயிட்டான் பாத்தீங்களா'' வர்ணனைகளோடு திட்டி தீர்த்தாள் இன்னொரு பெண்.

பதபதைப்பில் புழுக்கத்திலிருந்து விடுபட சட்டையின் மேல் பித்தானை கழட்டி விட்ட பெரியவர், பனியனுக்குள் சரசரத்த காகிதமும், ஐம்பது ரூபாய் நோட்டும் தலைகாட்ட இன்ப அதிர்ச்சியில் ''அடடா! உள்பாக்கட் ஞாபகத்துல மறதியா பனியன்ல வச்சிட்டேன், ஹா.. ஹா... ஹா.. என்று கடகடவென்று சிரித்தார். சுற்றியிருந்தவர்களும் ''நல்ல வேளை சார் பணம் கெடச்சுதே, பத்திரமா வைங்க'' என சம்பவத்தை சிரிப்பில் மூழ்கடித்தனர். கொஞ்ச நேரத்துக்கு முன் கறுப்பாய் இருந்த இளைஞன் மேல் அவர்கள் அவிழ்த்துவிட்ட கட்டுக்கதைக்கும், சுமத்திய திருட்டுக் குற்றத்திற்கும் எவ்வித மறுப்போ, வருத்தமோ இல்லாத அவர்களின் வெட்கம் கெட்ட சிரிப்பில் விகாரமாய்த் தெரிந்தது புற்று நோய்.

அதுமட்டுமல்ல திருடனின் நிறம் கறுப்புதான் என அவர்கள் அடித்து பேசியபோது, பேருந்துக்குள் திருடனைத் தேடியவர்களின் பார்வையைச் சந்திக்கையில் கறுப்பு நிறமாய் இருந்த பயணிகள் எல்லோரும் குற்றவாளிகள் போல் நெளிந்தனர். தானில்லை என்பதுபோல விழிகள் படபடக்க மற்றவர்களைவிட விரைவாகத் திருடனைத் தேடினர். 'கறுப்பு' என்றாலே கேவலம், சேரி குப்பம் என்றாலே குற்றம் எனும் வேத, ஆச்சாரக் குப்பைகளே நாகரிக் உலகத்தின் சுவாசமாய் இருக்கும் போது நுரையீரல் என்ன சமூகத்திலும் புற்றுதான் முளைக்கும்.


படிப்பகம்

www.padippakam.com

# கருத்துக் கலைப்பு படங்கள்






"பம்பொய்"கள் ஒன்றும் புதிதல்ல. தமது சார்பு நிலையை மூடிமறைத்து, நியாயப்படுத்தும், தமக்கும் தம்மவர்க்கும் சார்பான பிரச்சாரம் செய்யவும் தமிழ்நாட்டுப் பார்ப்பன அறிவாளிகள் நீண்டகாலமாகப் பின்பற்றும் பாணிதான்.


நாட்டில் மதவெறிப் பிரச்சாரத்தை நடத்தி, கலவரங்களைத் தூண்டி, மதவெறிப் படுகொலைகளைச் செய்துவருபவர்கள், ஆர்.எஸ்.எஸ் - பாரதீய ஜனதா - சிவசேனா போன்ற இந்து பாசிச வெறியர்கள்தாம். ஆனால் மதவெறிப் படுகொலைகளுக்கு இந்து, இசுலாமிய இரண்டு தரப்பு தலைவர்களும்தான் காரணம்; அதற்கு பலியாவது அப்பாவி மக்கள் தான் என்ற சமப்படுத்திச் சித்திரிப்பதும், நயவஞ்சகமான முறையில் இந்து பாசிச வெறியர்களை ஆதரிப்பதும்தான் மணிரத்தினத்தின் 'பம்பொய்.'' இந்து பாசிசத்தின் சித்தாந்தவாதிகளான கோவிந்தாச்சார்யா, குருமூர்த்தி ஆகியோரை விட





படிப்பகம்

www.padippakam.com




இந்த வகையில் ஆபத்தானவர்கள் மணிரத்தினம், பால குமாரன், சுஜாதா, "சோ". ராமசாமி போன்றவர்கள்.

ஆனால் இதுவும் தமிழ்நாட்டில் பார்ப்பன அறிவுஜீவிக ளுக்குப் புதிதல்ல.

ஒவ்வாருமுறை மதவெறிப் படுகொலைகள் நடக்கும் போதும் அது இந்து பாசிஸ்டு களால் தான் நடத்தப் படுகிறது என்பதை நன்கு அறிந்தபோதும் பொதுவில் "வகுப்புவாத வன்முறை", "மதவெறி அராஜகம்" என்கிற அரக்கனால் அப்பாவி மக்கள் தாக்கப்படுவதாக கருத்துப்படம் போடுவதையே ஆனந்த விகடன், கல்கி, ஐயங்கார் - செட்டியார் குடும்ப ஏடான குமுதம், "துக்ளக்" போன்ற பார்ப்பன பத்திரிக்கைகள் வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றன.

இதேபாணியில் இப்போது பார்ப்பன பாசிச ஜெயலலிதாவின் அநாகரிக, அராஜக, ஆபாச அரசியலை மூடிமறைத்து, திரித்து மழுப்பும் வகையில் அப்பத்திரிகைகள் அடுத்தடுத்து கருத்துப்படங்கள் போடுகின்றன. கவர்ச்சிவாத - பிழைப்புவாத - பொறுக்கி அரசியலின் நாயகியாக ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா தமிழ்நாட்டு அரசியலைக் கிரிமினல் மயமாக்குவதிலும், ஆபாசமயமாக்குவதிலும் சாதனை புரிந்துள்ளார். சமூக விரோத கிரிமினல் ரௌடிகளின் அராஜக வன்முறைக் கட்சியாகவும், அதிகாரத்துக்கு உதவவும், அதைத் தக்க வைத்து கொள்ளவும் ஆபாசமான முறைகளைப் பின்பற்றும் கட்சியாகவும் ஜெயலலிதா கட்சி விளங்குகிறது. சு.சுவாமிக்கு எதிரான கலவரங்களில் மட்டுமல்ல, பொதுக் கூட்டங்களுக்கு கும்பல் சேர்ப்பதே "ரெக்கார்டு டான்ஸ்" நிகழ்ச்சிகளைப் போட்டுத்தான்.

இந்த உண்மைகளை அறிந்திருந்தும் விகடன், கல்கி, குமுதம் ஆகிய வார இதழ்கள் வெளியிட்டுள்ள கருத்துப்படங்களை இங்கே தருகிறோம் பாருங்கள்! "ஆபாச அரசியலையும்", "வன்முறைத் தாக்குதலையும்" எல்லாத் தரப்பும்தான் நடத்துகின்றன என்று பொதுவான பொருள் தரும் வகையில் இவை உள்ளன. அதாவது பாசிச ஜெயலலிதாவின் ஆபாச, கிரிமினல் அரசியலால் பாதிக்கப்பட்டவர்களும் அவ்வாறு செய்வதாகக் கூறி, ஜெயலலிதா கும்பலுக்கு மறைமுகமாக வக்காலத்து வாங்குகின்றன. இது தான் அவாளின் பத்திரிக்கை தர்மம்!





தமிழகத்தில் கூலிக்கு வன் செயல் செய்வது அதிகரித்து வருகிறது. ஒரு வக்கீல் தாக்கப்பட்டது சமீபத்திய உதாரணம்.

## பாவலரேறு மறைந்தார்



பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 11.6.95 அன்று மறைந்து விட்டார். தமிழினத்தின் விடுதலைக்காகவும், தமிழ்மொழியின் தூய்மை காக்கவும் தாம் கொண்டிருந்த கொள்கையில் இறுதி மூச்சு வரை அவர் நாணயமாகவும் உறுதியாகவும் இருந்தார்.

பதவிக்கும் பவிசுக்கும் பல்லிளிப்பவர்களே புலவர்கள், அவ்வப்போது ஆர்ப்பரித்து பின் அரசு சன்மானங்களால் 'அமைதிப்படுவோரே' அறிஞர்கள் என்ற இழி மரபிலிருந்து விலகி, தன் அறிவு கூறும் உண்மைக்கு மட்டுமே உண்மையாக இருந்த நேர்மையாளர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் துவங்கி உலகத்தமிழ் மாநாட்டு எதிர்ப்பு வரை, உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராத இளைஞர்.

பார்ப்பன செயலலிதா கும்பலின் புலிவேட்டைக்கு அஞ்சி அதி தீவிரப் புலி ஆதரவாளர்கள் பூனைகளாகப் பதுங்கிய போது 'இதோ நானொருவன் இருக்கின்றேன் - என் தலையைக் கொய்யினும் கொய்க' என்று அறை கூவிச் சிறை சென்ற வீரர்.

தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தில் உயர்ந்த நம் கைகளை இறக்காமல் அவருக்கு அஞ்சலி செலுத்துவோம்!

இவண்
மக்கள் கலை இலக்கியக் கழகம்
தமிழ்நாடு



படிப்பகம்

www.padippakam.com

## கிரிமினல் படையின்

# சேனாபதி தாக்கரே

"சேனாதிபதி பாலாசாகேப் தாக்க ரே" என்றழைக்கப்படும் - மராத்திய மாநிலத்தை ஆளும் கூட்டணியின் பெரிய பங்காளியான சிவசேனா சர்வாதி காரி, இந்திய அரசியல் தலைவர்களி லேயே பலவகையிலும் வித்தியாசமான வர்.

அவர் ஒரு அரசியல் தலைவரா அல் லது சமூக விரோத கிரிமினல் மா∴பியா கும்பலின் தலைவனா?

அவர் ஒரு பாசிஸ்டா அல்லது இந் துமத வெறி மராத்திய இனவெறியரா?

— இப்படி எந்த வகையிலே அவரை வைப்பது என்று அடையாளங் காண முடியாதவாறு முதலாளித்துவ அர சியல் விமர்சகர்களைத் திணறடித்துக் கொண்டிருப்பவர்.

இந்திய தண்டனைச் சட்டப்படி குற் றங்களைச் செய்பவர்களை விட அதற் குப் பின்னணியில் இருந்து தூண்டி இயக் குபவர் அதிகமான கடுமையான தண்ட னைக்குரியவர். இந்தப் படிக்கு இந்திய தண்டனைச் சட்டங்கள் மட்டும் சரியான, உறுதியான முறையில் அவர் மீது பாய்ந் திருக்குமானால் பலமுறை தூக்கு தண்ட னைகளும், ஆயுள் தண்டனைகளும் பெற்று அழிந்து போயிருப்பார். அந்த அளவு கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கலவரங்கள், சூறையாடல், தீ வைப்பு, மிரட்டிப் பணம் பறிப்பு, கள்ளக் கடத்தல் என்று எல்லா வகைக் கிரிமினல் குற்றங்க ளுக்கும் சூத்திரதாரியாக உள்ளவர் இந்த "பாலா சாகேப் தாக்கரே". இப்படிப் பட் டவர் மீது இந்திய தண்டனைச் சட்டம் பாய மறுக்கிறது.

இன-மதவெறிக் கலவரத்தைத் தூண்டி பயங்கரவாதப் படுகொலை களை பகிரங்கமாக நடத்தி வருபவர் தான் இந்த பால் தாக்கரே என்பது அனை வருக்கும் தெரியும். ஆனால் மிகக் கொடிய கருப்புச் சட்டம் என்று கூறப்ப டும் பயங்கரவாதக் கலவரப் பகுதி சட் டம் "தடா" வை நீக்கி விடக் கூடாது, நீட்டிக்க வேண்டும் என்று வாதாடி வருகி றார். காரணம் அந்தத் தடா சட்டம் அவ ருக்கு எதிராகப் பாய மறுக்கிறது; மாறாக அவரது பயங்கரவாதத்தால் பாதிக்கப் பட்டவர்களைத் தான் பலி வாங்குகிறது.

அயோத்தியில் பாபரி மசூதியை இடித்துத் தரை மட்டமாக்கியது "நான் ஏவிவிட்ட என்னுடைய ஆட்கள் தான்" என்று நாடே கொந்தளித்துக் கொண்டி ருந்த போதும் திமிரோடு சொன்னார் பால் தாக்கரே. ஆனால் அந்த மசூதி இடிப்பு வழக்கில் அவரோ, அவரது ஆட் களோ குற்றவாளிகளாக்கப்படவில்லை.

ஆரிய இனவெறியன் நாஜி இட்லர், இந்துமதவெறியன் கோட்சே ஆகியோ ரைத் துதிபாடும் இந்த பால் தாக்கரே, வாயைத் திறந்தாலே பாசிச நஞ்சு கக்கிய போதும் இந்திய அரசின் செல்லப் பிள் ளையாகவே நடத்தப்படுகிறார்.

இதற்கு என்ன காரணம்? பால் தாக் கரே தனது சமூக விரோதக் கிரிமினல் குற்றங்களை அரசியல் போர்வையில் மறைத்துக் கொள்வது; தனது பாசிச நட வடிக்கைகளை பரபரப்பான வாய்ச்சவ டால்களால் பூசி மெழுகுவது; தனது மராத்திய இன வெறி - இந்து மதவெ றியை தீவிர தேச பக்த சாயத்தினால் பூசிக் காட்டுவது ஆகியவற்றில் அவருக் குள்ள திறமையா?

> "ஆரிய இனவெறியன்
> நாஜி இட்லர்
> இந்து மதவெறியன்
> கோட்சே
> ஆகியோரைத்
> துதிபாடும் பால்தாக்கரே இந்திய
> அரசின் செல்லப்பிள்ளையாகவே
> நடத்தப்படுகின்றார்".

இவற்றை விட முக்கியமாக இந்திய ஆளும் வர்க்கங்களுக்கும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கும் பால் தாக் கரே மிகவும் அவசியமாக உள்ளார். "இந்து, இந்தி, இந்தியா" என்கிற சிறு பான்மை மத, இன, மொழி ஒடுக்குமு றைக் கொள்கைக்கும், குறிப்பாக மராத் திய அரசியலில் தமது இறுக்கமான பிடி யைத் தக்க வைத்துக் கொள்ளவும் தாக் கரே அவர்களுக்குத் தேவையாக இருக்கி றார்.

பால்தாக்கரே சிவசேனாவை நிறு விய போது இருந்த அரசியல், பொருளா தார, சமூகப் பின்னணி, அதன்பின் அதன் நடவடிக்கைகள்; எது எதற்கெல்லாம் அந்த அமைப்பு எப்படிப் பயன்படுத்தப் பட்டு வந்தது என்கிற வரலாறு - இவை இந்திய அரசியலில் பால்தாக்கரே ஒரு செல்லப் பிள்ளையாக நீடிப்பதன் இரகசி யத்தைச் சொல்லும்.

1960-களின் மத்தியில் நாடு மீள முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கியது. பொருளாதாரத் தேக்கமும் பண வீக்கமும் அவற்றின் விளைவாக விலைவாசி ஏற்றமும் வேலையில்லாத் திண்டாட்டமும் தலைவிரித்தாடின. 9 மாநிலங்களில் காங்கிரசு ஆட்சியை இழந்து கூட்டணிகளோ, எதிர்க்கட்சி களோ ஆட்சியைப் பிடிக்க, அரசியல் உறுதிப்பாடு குலைந்தது. பொருளாதார நெருக்கடிகளின் சுமை முழுவதும் உழைக்கும் மக்கள் மீது ஏற்றப்பட்டு அவர்கள் பலவகைப் போராட்டங்களி லும் குதித்தனர். முக்கியமாக மேற்கு வங் கத்தில் வெடித்த நக்சல்பாரி உழவர் பேரெழுச்சி மற்ற மாநிலங்களைப் பற்றிப் படர்ந்தது.

பெரு நகரங்களில் தொழிலாளர்கள் போராட்டங்கள் தீவிரமடைந்தன. அவர் கள் வழக்கமான போலிக் கம்யூனிஸ்ட்க ளின் தலைமையை நிராகரித்து புரட்சிக ரத் தலைமையை நாடினர். இந்த நிலை யில் மேற்கண்ட நெருக்கடிக்களுக்குப் பிற்போக்கான காரணங்களைக் கற்பித்து உழைக்கும் மக்களை குறிப்பாக இளை ஞர்களைத் திசை திருப்பும் தீர்வுகளை முன் வைத்து உதிரித் தொழிலாளர்க ளைத் திரட்டி கம்யூனிசத்தின் எழுச்சியை அடக்குவதற்கு ஆளும் வர்க்கங்களும் கட்சிகளும் திட்டமிட்டன. அதன் ஒரு பகுதியாக மராட்டிய மாநிலத்தில், குறிப் பாக பம்பாய் பெருநகரில் தோன்றியது தான் சிவசேனா. பம்பாய் பெருநகரில் வேலையில்லாத் திண்டாட்டம், வாழும் இடம் - தொழில் நெருக்கடி அனைத்துக் கும் காரணம் மற்ற மாநிலத்தவர்கள் குறிப்பாக "மதராசிகள்" எனப்படும் மலையாளிகளும் தமிழர்களும் தான் என்கிற காரணத்தை முன் வைத்து சிவசே னாவை நிறுவினார். "∴ப்ரீ பிரஸ் ஜெர் னல்" என்ற பத்திரிகையின் அப்போ தைய கருத்துப்பட ஓவியராகப் பணிபு ரிந்த பால்தாக்கரே.

"மண்ணின் மைந்தர்களுக்கே வேலை வாய்ப்பளிக்க வேண்டும்" என் கிற முழக்கம் அப்போது பல மாநிலங்க ளிலும் எழுந்து கொண்டிருந்தது. அதற்கே இனவெறித் தன்மை பூட்டினார் பால்தாக்கரே. மராட்டிய மாநிலத்தின் தொழில் துறை முழுவதையும் ஆக்கிர மித்து நீண்ட காலமாகவே ஆதிக்கம் செலுத்தி வருபவர்கள் பார்சி - பனியா மார்வாடி முதலாளிகள் தாம். இன உரி மைப் போராட்டம் என்றால் இவர்க ளுக்கு எதிராகவும் இவர்களின் ஆளும் பிரதிநிதியான மைய அரசுக்கும் எதிரா



படிப்பகம்

www.padippakam.com

கத் தான் இருக்க வேண்டும். ஆனால் பிழைப்புத் தேடி பம்பாய்க்குத் தஞ்சம் புகுந்த உழைக்கும் பிற தேசிய இன மக்களுக்கு எதிராக மராத்திய இனவெறியைத் தூண்டிவிட்டார் பால்தாக்கரே. இப்போது சிறுபான்மை மதப்பிரிவினருக்கு எதிராக இந்து மத பாசிச - வெறியை ஏவிவிடுகிறார்.

அவர் மராத்திய இனவெறியின் சின்னமாக மராத்தியப் பேரரசை நிறுவிய சத்ரபதி சிவாஜியை முன்னிறுத்தினார். பின்னாளில் தன்னையே மராத்தா சாதியைச் சேர்ந்த மராட்டியப் பேரரசனாக் கருதத் தலைப்பட்டார். "சத்ரபதி சிவாஜி - மொகலாயப் பேரரசர்களை எதிர்த்துப் போரிட்டு இந்து சாம்ராஜ்யத்தை நிறுவிய இந்து தன்மானச் சிங்கம்'' என்று ஏற்கனவே மதவெறியின் சின்னமாக ஆர்.எஸ்:எஸ். பாசிச பரிவாரங்களால் முன்னிறுத்தப் படுபவர். இதன் காரணமாக பின்னாளில் சிவசேனா ஆர்.எஸ்.எஸ். பாசிசக் கூட்டணி உருவானது. தன்னை ஒரு தேசபக்தத் தலைவனாக முதன்மைப்படுத்தும் என்பதால் மராத்திய இனவெறியை அடக்கி வாசித்து வருகிறார் பால்தாக்கரே.

இப்போது ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதாக் கும்பலின் சகபாடியாகப் பிணைந்து விட்டபோதும், பால்தாக்கரேயை ஒரு தலைவனாக உருவாக்கி ஊக்குவித்தது காங்கிரசுதான். 1966 ஜூன் 19-ந் தேதி சத்ரபதி சிவாஜி பிறந்தநாள் - சிவசேனாவை நிறுவிய பால்தாக்கரே ஆறே மாதங்களில் பம்பாய் நகரம் முழுவதுமாக 95 கிளைகளை அமைத்தார். அதற்கு முக்கிய காரணம், அப்போது மராட்டிய மாநில முதல்வராக இருந்த வி.பி. நாயக், மத்திய அமைச்சராக இருந்த ஒய்.பி. சவாண், அனைத்திந்திய காங்கிரசு பொருளாளர் எஸ்.கே. பட்டீல் ஆகியோரின் தூண்டுதலும் உதவியும் தான்.

நேருவின் நம்பகமான அரசியல் தரகராக இருந்து இந்தியாவின் சீனப் போரில் நேரிட்ட படுதோல்வியின் காரணமாக இராணுவ மந்திரி பதவி பறிக்கப்பட்ட கிருஷ்ணமேனன் இரு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் ஆதரவுடன் 1967 பொதுத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக பம்பாய் தொகுதியில் போட்டியிட்டார். நேருவின் இடதுசாரி - சோசலிசக் கொள்கைகளுக்கு காரணம் அவர்தான் என்று கருதிய பம்பாய் பெரு முதலாளிகள் அவரை எப்படியும் தோற்கடித்து விடவேண்டும் என்று விரும்பினர். அதற்காக அப்போதுபிரதமராகி இருந்த இந்திரா மராட்டிய காங்கிரசுத் தலைவர்கள் மூலம் பால் தாக்கரேயைப் பயன்படுத்திக் கொணடார். பம்பாயில் குடியேறியிருந்த மலையாளிகள், தமிழர்கள் அனைவரும் கிருஷ்ணமேனனை ஆதரித்ததா



கக் குற்றஞ்சாட்டி அவர்களுக்கெதிராக இனவெறி பயங்கரவாதத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டார் பால்தாக்கரே. குறிப்பாக சிறு வியாபாரிகள், உதிரிப் பாட்டாளிகள் பலர் படுகொலை செய்யப்பட்டதோடு, அவர்களது குடியிருப்புகள், கொளுத்தப்பட்டு, பிற சொத்துக்கள் சூறையாடப்பட்டு பம்பாய் பெருநகரில் இருந்து விரட்டப்பட்டனர். இதனால் மராட்டிய சிறு வியாபாரிகள், உதிரிப் பாட்டாளிகளுடைய பெரும் ஆதரவைப் பெற்றதோடு, வீட்டு மனை கட்டிட வியாபாரிகள், முதலாளிகள் சிவசேனாவின்

> "கட்சிக்குள்
> ஜனநாயகத்தைக்
> கோரும் போக்கு
> எழுந்து விட்டது. இதை
> என்னால் சகித்துக் கொள்ள
> முடியாது''. - தாக்கரே

முதுகெலும்பாக அமைந்தனர். சமூக விரோத கிரிமினல்களின் கூடாரமாக அது வளர்ந்தது.

அடுத்த ஆண்டு (1968) நடந்த பம்பாய் மாநகரத் தேர்தலில் 42 தொகுதிகளைக் கைப்பற்றி காங்கிரசுக்கு அடுத்த இடத்தைப் பிடித்தது. அந்த ஆண்டு பம்பாய் ஆலைத் தொழிலாளர்களிடையே பெரும் போராட்டங்கள் வெடித்தன. அவர்களது வேலை நிறுத்தங்களை உடைக்கவும், தொழிற் சங்கங்களைத் தகர்க்கவும் காங்கிரசு மற்றும் பெரு முதலாளிகளின் நேரடி உதவியுடன் "பாரதீய காம்கார் சேனா'' என்ற தொழிற்சங்கப் பிரிவை சிவசேனா நிறுவியது. பெரும்பாலும் கருங்காலிகளையும், கிரிமினல் ரௌடிகளையும் தலைவர்களாக அணிகளாகப் பெற்ற இந்தச் சங்கம் பெரு முதலாளிகள் போலீசு துணையுடன் "இடது சாரி'' தொழிற்சங்க அலுவலகங்களைத் தாக்கி பல முன்னணித் தொழிலாளர்களைப் படுகொலைகள் செய்து, தொழிலாளர்களிடம் கட்டாய சந்தா வசூலிக்கத் துவங்கியது.

இதற்கிடையே "மார்மிக்'' என்ற மராத்தி கருத்துப் பட பத்திரிக்கையும், பிறகு "சாம்ணா'' என்ற நாளிதழையும் பால் தாக்கரே துவங்கி நடத்தினார். பம்பாய் புற நகரில் கலாநகர் பகுதியில் கோட்டை போன்ற பாதுகாப்புடன் கூடிய மாளிகை கட்டிக் கொண்டார். கையிலும் கழுத்திலும் உத்திராட்ச மாலைகளைச் சுற்றிக் கொண்டு தன்னைச் சுற்றி தனிநபர் துதி, தனிநபர் சர்வாதிகார, தனிநபர் வழிபாடு செய்யும் அடியாட்படையை உருவாக்கிக் கொண்டார். திராவகத்தில் தோய்த்த பேனாவினால் இனவெறியைக் கிளரும் கட்டுரைகள், கருத்துப்படங்களை வரைந்து தள்ளினார். எங்காவது ஒரு சொந்தக் காரணத்துக்காக ஒரு மராத்தியனை வேறொரு இனத்தவன் தாக்கிவிட்டால் போதும், அதற்கு இனச் சாயம் பூசி, பழி வாங்கும்படி தூண்டி தூபம் போடுவார்.

இப்படிப்பட்ட இனவெறியின் காரணமாக, சிவசேனா நிறுவப்பட்ட பத்தாண்டுகளில் பம்பாய் பெருநகர், தானா, கல்யாண் முதலிய புறநகர் பகுதிகளில் சக்திவாய்ந்த குண்டர்படையாக விரிவடைந்தது. அறுபதுகளில் "கம்யூனிஸ்டு'' தொழிற்சங்கங்களைத் தகர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சிவசேனா குண்டர் படை எழுபதுகளில் தத்தா சமந்தின் தலைமையிலான போர்க்குணமிக்க தொழிற்சங்கவாத அமைப்புகளைத் தகர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஐந்து நட்சத்திர விடுதிகள், ஏர்-இந்தியா விமான சேவை முதல் துணி ஆலைகள் வரை பல பிரிவுகளில் புகுந்து கருங்காலிச் சங்கங்களை நிறுவியதோடு தொழிலாளர்களை மிரட்டி உறுப்பினர்களாக்கி, கட்டயாக சந்தா வசூல் செய்தது. வேலை நிறுத்தங்களை உடைக்கும் கருங்காலித்தனம் செய்து முதலாளிகளிடமிருந்தும் ஏராளமாகக் கைக்கூலி பெற்றது.

1975-77-இல் அவசர நிலை பாசிச ஆட்சியைப் பிரகடனம் செய்த இந்திரா தீவிர இடது சாரி - வலது சாரி சக்திகளுக்கு எதிரான முற்போக்குவாதியாகக் காட்டிக் கொள்வதற்காக நக்சல்பாரி கம்யூனிச அமைப்புகளோடு ஆர்.எஸ்.எஸ். ஆனந்த மார்க்கம் ஆகிய மதவெறி அமைப்புகளையும் சிவசேனாவையும் தடை செய்தார். உண்மையில் சிவசேனாவின் மீதான தடை ஒரு கண் துடைப்பு

படிப்பகம்

www.padippakam.com

தான்; ஏனென்றால் எதிர்க் கட்சித் தலைவர்கள் சிலரோடு, தடை செய்யப்பட்ட பிற அமைப்பின் முன்னணி வீரர்கள் சிறையிலடைக்கப்பட்ட போதும் சிவசேனா "சேனாபதி" மீது இந்திரா அரசு கை வைக்கவே இல்லை. தனது கட்சியைத் தடை செய்தாலும் அவசர நிலை ஆட்சியைப் பால்தாக்கரே எதிர்க்கவில்லை; மாறாக அடுத்து நடந்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்த ஜனதா கட்சி, நாடாளுமன்ற உரிமை மீறல் குற்றத்துக்காக இந்திராவைக் கைது செய்தபோது அதை எதிர்த்து "பந்த்" நடத்தினார். 1980-களில் பம்பாய் பெருநகராட்சியை சிவசேனா கைப்பற்றியது. இனவெறிக் கும்பலுக்கேயுரிய புனிதவாதம் பேசி வந்த சிவசேனாவும் லஞ்ச ஊழல், அதிகார முறை கேடுகளில் மூழ்கித் திளைத்தது. அது கட்டி வைத்திருந்த குண்டர் படை வியாபாரிகள், தொழிலதிபர்களிடம் "மாமூல்" வசூலிக்கும் கிரிமினல் மஃபியாவாக வளர்ந்தது.

இதைத் தொடர்ந்து சிவசேனாவின் நடவடிக்கைகளிலும், தத்துவத்திலும் இரண்டு முக்கிய மாற்றம் ஏற்பட்டது. பம்பாய் பெருநகரைக் கட்டுப்படுத்துவதற்கான தெருப்போர், இரகசிய உலக கிரிமினல் மஃபியா கும்பல்களுக்கிடையே உச்ச கட்டத்தை எட்டியது. தாவூது, கௌலி, நாயக் ஆகிய மூன்று மஃபியா கும்பல்கள் மூர்க்கத்தனமான போரில் இறங்கி ஒருவரை ஒருவர் கொன்று குவித்தனர். அது பம்பாய் பெருநகரில் வீடு, வீட்டுமனை வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவது, வியாபாரிகள், முதலாளிகள் ஆகியோரிடம் பணம் பறிப்பது, சினிமா உலகை ஆட்டிப் படைப்பது, போதை மருந்து - ரொக்கம் - தங்கம் - மின்னணுப் பொருள் கடத்தல் ஆகிய கிரிமினல் தொழில்களில் யார் ஆதிக்கம் வகிப்பது என்பதற்கான பல ஆயிரம் கோடி ரூபாய் புரளும் கிரிமினல் தொழிலுக்கான போராக பரிணமித்தது. சிவசேனா தானே ஒரு கிரிமினல் மஃபியா கும்பலாக இருந்த போதும், இந்த மூன்று பிரிவினரையும் மாறி மாறி ஆதரித்து ஆதாயம் அடைந்தது. இந்த தெருப் போரின் இறுதியில் தாவூது இப்ராகிமின் கும்பல் வென்று இரகசிய உலக அதிகாரத்தைப் பிடித்தது: கௌலியையும், அமர் நாயக்கையும் மராத்தியர் என்கிற காரணத்தினால் சிவசேனா ஆதரித்த போது, அதிகாரப் போரில் வென்ற தாவூதுடன் இரகசிய உறவு வைத்துக் கொண்டது சிவசேனா.

ஆனால், இது அப்போது சிவசேனா எடுத்திருந்த புதிய அவதாரத்துக்கே முரணானதாகவும், பித்தலாட்டமாகவும் இருந்தது. ஏனெனில் மராத்திய இனவாதம் ஒரு குறுகிய வட்டத்துக்குள், பிற தேசிய இனத்துக்கு எதிரானதுதான். இதனால் பம்பாய் பெருநகருக்கு வெளியேயும், குறிப்பாக தன்னை ஒரு "தேசிய" கட்சியாகக் காட்டிக் கொள்வதும் சாத்தியமில்லை என்பதால் இசுலாமியருக்கு எதிரான இந்து மத வகுப்புவாத அவதாரம் எடுத்தது. சிறுபான்மை இசுலாமியருக்கு எதிராக பாகிஸ்தானுக்கு எதிராக விஷங்கக்கும் கூச்சல் போடத் துவங்கியது. இதில் ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதாவை கையாலாகாதவர்கள் என்று இழித்துப் பேசி போட்டியிடும் அளவு முன்னேறியது. அதே சமயம் தாவூது இப்ராகீம் கும்பலுடன் இரகசிய உறவு கொண்டிருந்தது.

இந்தப் புதிய அவதாரத்துக்குப் பிறகு தான் பம்பாய்ப் பெரு நகர ஆட்சியைப் பிடித்ததோடு ஔரங்காபாத் நகராட்சியில் மயிரிழையில் பெரும்பான்மை பெறத் தவறியது. மராட்டிய சட்ட மன்றத்துக்குள் நுழைந்தது. இதுவரை சிவசேனா கேலி பேசி வந்த ஆர். எஸ்.எஸ். பரிவாரத்தின் அதிரடிப் பிரிவாக மாறியது. பம்பாயிலும் பிற மராட்



டிய நகரங்களிலும் பல மதவெறிக் கலவரங்களை நடத்தியது. ஆரம்பம் முதல் தலித் இயக்கத்துக்கு எதிராக மராத்தி மேல் சாதித் தாக்குதல்கள் நடத்தி வந்ததோடு மரத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கார் பெயர் சூட்டுவதற்கு எதிராக சாதிப்படுகொலைகளை நடத்தியது. மண்டல் கமிசன் - இடஒதுக்கீட்டைக் கடுமையாக எதிர்த்தது. பாகிஸ்தான் விளையாட்டுக்காரர்கள், சினிமாக்காரர்கள் பம்பாய் வருவதை எதிர்த்துக் கலகங்கள் நடத்தியது.பத்தரிக்கையாளர்களைத் தாக்குவதையும் வழக்கமாக மேற்கொண்டது.

1989 பொதுத் தேர்தல்களில் நாடெங்கும் ராஜீவ் காங்கிரசு எதிர்ப்பு அலை வீசியதைப் பயன்படுத்திக் கொண்டு பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர்ந்து நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தது. அடுத்து வந்த 1990 சட்டமன்றத் தேர்தலில் மராத்திய சட்டமன்ற "மந்திராலயத்தில் காவிக் கொடி பறக்குமென்று அறிவித்தார் பால்தாக்கரே. அந்தக் கனவு உடனே நிறைவேறவில்லை. எனினும் சிவசேனா எதிர்க்கட்சி இடத்தைக் கைப்பற்றியதோடு கூட்டணிக்கு 94 எம்.எல்.ஏ. இடங்கள் கிடைத்தன. ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களோடு சேர்ந்து கொண்டு அயோத்தி பாபரி மசூதி இடிப்பில் தனது கட்சிக்கே பங்கு இருப்பதாக வம் பீற்றிக் கொண்டது. ஆனால் இரண்டு பின்னடைவுகளை சிவசேனா சந்தித்தது. தேர்தல் விதிமுறைகளுக்கு விரோதமான முறையில் மதவெறி வகுப்புவாதப் பிரச்சாரம் செய்ததற்காக அதன் எம்.எல்.ஏ., எம்.பிக்கள் தேர்தல் செல்லாதென்று அடுத்தடுத்து உயர் நீதி மன்றத் தீர்ப்புகள் வந்தன. அந்த வழக்குகள் இன்னமும் உச்சநீதி மன்ற விசாரணையில் உள்ளன. அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான சகான் பூஜ்பால் முதன் முறையாக சிவசேனாவைப் பிளந்து கொண்டு போய் காங்கிரசில் இணைந்து மந்திரியானார். இதற்குக் காரணம் சிவசேனாவின் இரண்டாம் மட்டத்தில் இருந்து பூஜ்பாலைப் புறக்கணித்து விட்டு, மனோகர் ஜோஷியை எதிர்க் கட்சித் தலைவராக்கியதுதான். பூஜ்பாலுக்கு இரண்டாவது முறை பம்பாய் மேயர் பதவி கொடுத்து சமரசம் செய்து கொள்ள தாக்கரே முயன்றார். ஆனால் அது பலிக்கவில்லை. அவர் கட்சி மாறிவிட்டார்.

தன்னை ஒரு நாஜிக் கட்சியாகப் பாவித்துக் கொள்ளும் சிவசேனாவுக்கு இது முதல் பெரும் பிளவு - பெரிய அதிர்ச்சி தான். அதன் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களில் இரண்டு பேர் காங்கிரசினால் விலைக்கு வாங்கப்பட்டு, சிவசேனாவில் இருந்து விலகி, கட்சிசாராத தகுதியை அடைந்தனர். அயோத்தி பாபரி மசூதி இடிப்புக்கு உரிமை பாராட்டி பகிரங்கமாகவே பம்பாய் மதவெறிப் படுகொலைகளை நடத்தியபோதும் சிவசேனா செல்வாக்கு சரியத் தொடங்கியதோடு, உட்கட்சிக் குடுமிப் பிடிச் சண்டை வெடித்தது. மாதவ் தேஷ்பாண்டே என்ற இன்னொரு மூத்த தலைவர் பத்திரிக்கையாளர்களைக் கூட்டி பகிரங்கமாகவே சேனாபதி மீது குற்றஞ்சாட்டினார். "பால்தாக்கரேயின் மருமகன் ராஜ் தாக்கரேயையும், மகன் உதய் தாக்கரேயையும் வாரிசுகளாக வளர்த்து, பரம் பரைத் தலைமையைத் திணிப்பதற்கு முயற்சி நடக்கிறது" என்று அவர் சிவசேனா தொண்டர்களை எச்சரித்தார். அதே சமயம் 1990-க்குப் பிறகு நடந்த எல்லா இடைத் தேர்தல்களிலும், பம்பாய் மாநகரத் தேர்தல்களில், மாவட்ட மன்றத் தேர்தல்களிலும் சிவசேனா அடுத்தடுத்து தோல்வி கண்டது.

இப்படி ஏற்பட்ட உட்கட்சி எதிர்ப்



படிப்பகம்

www.padippakam.com

பையும், தேர்தல் பின்னடைவையும் சமாளிப்பதற்கு ஒரு அதிரடி நடவடிக்கையாக சிவசேனாவின் சேனாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். பால் தாக்கரே. இது மோகன்தாஸ் காந்தி முதல் கருணாநிதி வரையில் கட்சி மீது தனது சர்வாதிகாரப் பிடியை இறுக்குவதற்கான ஒரு உத்தி தான் என்றாலும் இதற்கு பால் தாக்கரே சொன்ன காரணம் வித்தியாசமானது. "கட்சிக்குள் ஜனநாயகத்தைக் கோரும் போக்கு எழுந்து விட்டது. இதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது" என்று பகிரங்கமாகவே அறிவித்தார்.

உண்மையில் தலைமைப் பதவியைத் துறப்பது அவரது நோக்கமே கிடையாது. தனது வாரிசுகளுக்கு எதிரான போட்டியை ஒடுக்குவதும், தனது சர்வாதிகாரத்தை உறுதி செய்வதும் தான் அவரது நோக்கம். அவர் எதிர் பார்த்தபடியே அவர் ஊட்டி வளர்த்த விசுவாசப்படை பால்தாக்கரேயின் நெடிய மதிற் சுவர் மாளிகையின் முன்னே திரண்டது. "தாக்கரேதான் எங்கள் ஒரே தலைவர்" என்று வெறிக் கூச்சல் போட்டது. மனோகர் ஜோஷி, பிரமோத் நிரவால்கர், சுதிர் ஜோஷி ஆகிய அடுத்த மட்டத் தலைவர்களும் தாக்கரே காலில் விழுந்து தமது விசுவாசத்தை நிரூபிக்க வேண்டியதானது.

தாக்கரே தனது பதவி விலகல் நாடகத்தை முடித்துக் கொண்டதோடு, அதன் நோக்கம் என்னவென்று சேனாபவன் பேரணியில் பிரகடனம் செய்தார், "துணிச்சல் மிகு இளைஞர்களின் கட்சிக்குத்தான் நான் தலைமையேற்க விரும்பினேன். சும்மா உட்கார்ந்து கொண்டு விமர்சனம் செய்யும் கோழைகளின் கட்சிக்குத் தலைமையேற்க விரும்பவில்லை. அதன் பின்னர் மனோகர் ஜோஷி அறிவித்தார். "அவர் கட்சிக்கு ஒரு புதிய திட்டத்தை தந்து இன்னும் செயலூக்கமும் கட்டுப்பாடும் மிக்க இளைஞர்களை ஈர்க்க விரும்பினார்."

இதன்பொருள் என்னவென்று விரைவிலேயே தெரியத் துவங்கி விட்டது. மராட்டிய மாநிலம் முழுவதும் குறிப்பாக பம்பாய் பெரு நகரிலும் புறநகரிலும் பெருமளவு சமூக விரோதக் கிரிமினல் குற்றவாளிகளை உறுப்பினர்களாக்கி, அவர்களுக்கு இந்து மதவெறி பாசிச போதனையும், பயிற்சியும் ஆயுதங்களும் அளித்துத் தயாரித்தனர். அருண் கௌலி, அமர் நாயக் ஆகிய இரு தாதாக்களுடன் நேரடி கூட்டு ஒப்பந்தம் போட்டுக் கொண்டு பம்பாய் பெரு நகர, புறநகர இரகசிய உலகையும், சினிமா உலகையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். உருட்டல் மிரட்டல் வன்முறை வழிகளில் கோடிக்கணக்கில் கட்சி நிதி குவித்தனர்.

பாபரி மசூதி இடிப்பைத் தொடர்ந்து

> "செய்து முடித்து விட்டோம் நாங்கள் செய்து முடித்து விட்டோம் எனது பையன்கள் மசூதியை உடைத்தெறிந்து விட்டார்கள்".
>
> — தாக்கரே

இந்து மத வெறிப் படுகொலைகளை ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் கட்டவிழ்த்து விட்டபோது, பம்பாய் பெருநகரிலும், புறநகரிலும் சிவசேனா அதற்குத் தலைமையேற்றது. பம்பாய் ஜோகேஸ்வரியில் தொழிற்சங்கத் தகராறு காரணமாக இரு மூட்டை தூக்கும் தொழிலாளிகளை, சில முசுலீம் தொழிலாளிகள் கொன்று விட்டனர். இதையே இந்துக்களுக்கு எதிரான தாக்குதல் என்று சித்தரித்துப் பழி வாங்கும் தாக்குதல்களைத் தொடுக்கும்படி சிவசேனா வெறியர்களுக்குத் தாக்கரே உத்தர விட்டார். நூற்றுக்கணக்கான இசுலாமியர்கள், முதியோரும், பெண்களும், குழந்தைகளும் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். அப்பாவிகள் பலரைப் பிடித்து, கலவரத்தில் ஈடுபடும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்திச் சுட்டுக் கொன்றனர். போலீசும் - சிவசேனா கிரிமினல்களும். இசுலாமியர் மட்டுமின்றி தமிழர்கள், மலையாளிகள், வங்காளிகள் என்று பல ஆயிரம் பேர் அகதிகளாகத் துரத்தியடிக்கப் பட்டனர். இதன் மூலம் பல குடிசைப் பகுதிகளைக் காலி செய்து விட்டு மனைகளாக்கி கட்டிடப் பெரு முதலாளிகளிடம் இருந்தும் பல கோடி ரூபாய் வசூல் செய்தனர்.

சிவசேனா கிரிமினல்களின் மத வெறிக் கொலைக்குப் பதிலடியாக, ஆத்

> "முஸ்லிம்கள் பாகிஸ்தானியர் போல இங்கே நடந்து கொண்டால் அவர்களது புட்டத்தை எட்டி உதைப்பேன்".
>
> —தாக்கரே

திரமுற்ற, இசுலாமிய இளைஞர்களை வைத்து சிறுபான்மை அடிப்படைவாதிகளும், இரகசிய உலக மாஃபியாக்களும் இணைந்து பம்பாய் நகரில் பல குண்டு வெடிப்புகளை நடத்தி அதிலும் நூற்றுக்கணக்கானோர் பலியாயினர். இதையே இந்து - முஸ்லீம் வகுப்புவாதப் போராக சித்தரித்து, முஸ்லீம் இரகசிய உலகத் தாதாக்களுடன் காங்கிரசு முதல்வர் சரத் பவாருக்குள்ள உறவை அம்பலப்படுத்தி சிவசேனா - பாரதீய ஜனதா கூட்டணி அதிகாரத்தைப் பிடித்தது. சிவசேனாவின் மனோகர் ஜோஷி என்ற கட்டுமானத் தொழிலதிபர் முதல்வராக்கப்பட்டார். ஆனால் பால்தாக்கரே உண்மையான அதிகார மையம் தான் தான் என்பதைப் பகிரங்கமாக அறிவித்தார். அரசு ஆவணங்கள் - கோப்புகள் அவரது பரிந்துரைகளைப் பெற்றே ஆணைகளாக வருகின்றன. பம்பாயில் குடியேறுவதற்கு அனுமதி முறை, பம்பாயில் சட்ட விரோதமாகக் குடியிருக்கும் வங்காள தேசிகளையும், பாகிஸ்தானிகளையும் கண்டு பிடித்து வெளியேற்றுவது என்கிற பெயரில் முஸ்லீம்கள் மீதான வேட்டை என்று மத, இனவெறி, அதிரடி நடவடிக்கை எடுக்கும்படி ஆணையிட்டார்.

சிவசேனா துவங்கப்பட்டு 29 ஆண்டுகளில் படிப்படியாக முன்னேறி மாநில ஆட்சியைப் பிடிக்குமளவு வளர்ந்து விட்டதற்குக் காரணம் அடுத்தடுத்து வந்த காங்கிரசு அரசுகள் அதை ஊட்டி வளர்த்ததும், பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் அதற்கென ஒரு அரசியல் சமூகத் தகுதி வழங்கிக் கூட்டுச் சேருவதும் தான். இதோடு கூடவே இடது சாரி முற்போக்கு என்று கூறிக் கொள்ளும் இயக்கத்தினர் சிவசேனாவின் இன, மத வெறி, பாசிசத் தன்மைகளை அவ்வப்போது எதிர்த்து அம்பலப்படுத்தி வந்த போதும், அதன் கிரிமினல் மாஃபியா குண்டர் படையைக் களத்தில் சந்திக்கும்படி தொழிலாளர்களையும் அணிகளையும் தயாரிக்கத் தவறி விட்டனர். காங்கிரசு கயவாளிகள் தமது குறுகிய கட்சி, அதிகார நலன்களுக்காக பஞ்சாபில் ஒரு ஜர்னைல் சிங் பிந்தரன்வாலேவை உருவாக்கி, இறுதியில் அந்த மதவெறி இரத்தக் காட்டேரிக்கு தாமே பெரும்பலி கொடுக்க வேண்டியவராயினர். பம்பாய் பெரு நகருக்கே உரிய சீரழிந்த கழிசடை வடிவத்திலான இன்னொரு பிந்தரன்வாலேவான பால்தாக்கரே தன்னை ஊட்டி வளர்த்த காங்கிரசு - ஆர்.எஸ்.எஸ். பாசிசங்களுக்கே ஒரு சவாலாகத் திரும்பியுள்ளார். சகித்துக் கொண்டு சமரசம் செய்து வரும் அந்த ஆளும் கட்சிகளுக்கு இன்னமும் அவரது பயன்பாடு தேவையாக உள்ளது. ஆனால் உழைக்கும் மக்கள் இந்த கிரிமினல் படையைத் துடைத்தொழிக்காமல் ஒரு அடி கூட முன்னேற முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

# மழுங்கல்

❑ துரைசண்முகம்

"இந்த ராவுல இவ்ளோ சனம் எங் கேர்ந்து வருது?"

"தே! ரெண்டாட்டம் வுட்டு வருது புள்ள. பக்கத்துல தான் சினிமா கொட் டா!"

"தெரிஞ்சிருந்தாலும், படத்துக்கு போயிருக்கலாம்."

"ஆமாம். பஸ் ஸ்டாண்டுலதான் கொசு ஒரு பக்கம்னா ஆளுக ஒருபக்கம் வெரட்றானுக" ஒடுக்கு விழுந்த அலுமி னியக் குவளையால் கால்களைச் சொறிந்து கொண்டும், மழுங்கிய கைக ளால் கன்னத்தை தேய்த்துக் கொண்டும் கும்பலாய் அமர்ந்து அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

"தே, தே முதுகுல என்னவோ புடுங்குற மாதிரி இருக்கு பாரு"

"அட கருவண்டு. என்னாங்குறேன் பச போட்ட மாதிரி ஒட்டிக் கெடக்கு" வண்டை நெருக்கிப் பிடிக்க முயற்சித்து, மழுங்கிய விரல் இடுக்குகள் ஒத்துவராத தால் கையால் உரசித் தள்ளினாள். "மாங் கொட்ட மாதிரி கொடஞ்சிருக்கு, ஒனக்கு தெரியவே இல்லியா மூஞ்சப் பாரு" அவள் அக்கறையோடு கடிந்து கொள்ள, செல்லரித்தது மாதிரி இருந்த மூக்கை உள் ளங்கையால் கசக்கியபடி தும்மிக் கொண்டே முன்பல் ஈறு தெரிய சிரித்துக் கொண்டான்.

வளைந்த முதுகுத் தண்டின் மேல் முரடு கட்டிய மாதிரி இருந்த புண்ணில், கீழே கிடந்த காகிதத்தில் எச்சிலை தொட்டு ஒட்டி வைத்தான் இன்னொரு வன், "வேலு புண்ணா இருக்கு நம்ம டாக்டர்கிட்ட காமி"

"எங்க நாகூர் பண்டிக முடிஞ்சி தான், கும்மாணம் முத்து புள்ள மண்டபம் போவணும்"

"நாகூருக்கு மூணு நாள் இருக்கு. நாளைக்கு வலங்கமான் போறம்ல கும் மாணத்துல எறங்கி காட்டிட்டு போவ லாம்" அவளது ஆலோசனையை அவன் நிராகரித்தான், "தே நாளைக்கு தான் மன்னார்குடிலே வெண்ணதாலி கஞ்சியும் கெடைக்கும், காசும் கெடைக் கும் இருந்துபுட்டு, சாயங்காலம் மாதிரி வலங்கமான் போவலாம்."

"எப்ப பாரு முத்த வுட்டு தான் போவ, ஏட்டிக்கு போட்டியே உம் பொழப்பு" எரிச்சலுடன் விலாவை கை எலும்பால் சொறிந்து கொண்டவளை, இன்னொருத்தி "வெடுக்குன்னு பேசாத ஏன் அலுத்துக்குற" என்றாள் உரிமை யோடு.

"இப்ப இல்லக்கா அவ எப்பவுமே இப்படித்தான் கோணம் கெட்ட செறுக் கிக்கி கோவந்தான் வரும். ஏட்டிக்கு போட்டிங்கிறாளே நேத்து இவ பேச்ச கேட்டுட்டு கூத்தா நல்லூர் போவாம திரு வாரூர் போயிருந்தா நம்ப பொழப்பு என் னாயிருக்கும். பிரியாணியோட பச்சை யும், செவப்புமா நோட்டும் வுழுந்துதே எங்காவது கெடைக்குமா" காலைச் சுற் றும் கொசுக்களை கையசைத்து விரட்டிக் கொண்டே இன்னொருத்தியிடம் நியா யம் சொன்னான் அவன்.

"சரி, சரி, பதிலுக்கு பதிலு பேசுனா சண்டைதான் வளரும். கும்மாணம் போறப்ப காட்டலாம், நாள கத என்னா சொல்லு?" பேச்சு வார்த்தைகளை ஒதுக்கி வைத்துவிட்டு,நாளைய திட்டத் துக்கு பதில் கேட்டான் இன்னொருவன்.

"தோ பாரு என் ரோசன, நாளைக் கும் இங்கேயே திருவிசாவ முடிச்சிட்டு, பொறவு வலங்கமான் போவலாம். நீ என்னா சொல்ற."

"சர்தாண்ணே வெண்ணதாலின்னா கொஞ்சம் கூட்டம் வரும். சில்லற வுழும். இப்ப அவுதியா போயி என்னத்த வாரப் போறோம். வலங்கமான்ல ரெண்டாம் நாள்தான் காசு பேறும்" அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டு ஆமோதித்தாள் இன் னொருத்தி. நிலைமை சாதகமாயிருக்கும் என உணர்ந்தவர்களாய், அனைவரும் நாளை மன்னார்குடியிலேயே பிச்சையெ டுக்கலாம் என ஏற்றுக் கொண்டவர்க ளாய் "சரி சரி கொஞ்சம் படுக்கலாமா" என யோசித்தனர்.

"ஏண்ணே அப்படி அந்த கட்டை யோரம் கொஞ்சம் சாயலாமா" என் றாள். ஏற்கனவே அவர்களை அருவருப் புடன் அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்த வன், "தே, தே! அப்படி போங்க அங்க ஒக்காந்து கெடக்கீங்கன்னுதான் எல்லாம் இங்க வந்தோம் இங்கயும் வர்றீங்களா பஸ் ஸ்டாண்டுல உங்க தொல்ல பெரி சாப் போச்சு. போங்க அந்தாண்டை" நெற்றியைச் சுருக்கிக் கொண்டு பொரிந்து தள்ளினான்.

"யப்பா ஆஸ்திய கேட்ட மாதிரில்ல கத்துற. இது உன் வூட்டு எடம் நீயே ஒக்காரு நாங்க வல்ல" அலுமினிய குவ ளையால் தலையில் அடித்துக் கொண்டு பதிலுக்கு கோபம் காட்டினாள்.

"தே அறிவுகெட்டதே, போ அந் தாண்டை சார் நீங்க கோவிச்சுக்காதீங்க." என்று மன்னிப்பு கேட்டுக் கொண்டு, அவளிடம் மெல்லிய குரலில், "தே பனாத நாயே, நம்ப பொழப்பே நாயி பொழப்பு. நீ இப்படி கண்டவங்ககிட்டே யும் தாண்டி குதிச்சா, நாள மறுநாளு நாம ஒதுங்க முடியாது பொழப்பு கெட்டுடும் தெரியுமா! போடி அந்தாண்ட", கோப மாய் கையை ஓங்கி காண்பித்தான்.

"ஆ! நீ பெரிய குபேரன் நான்தான் பனாத போறியா, அவன் என்னமா நாயி கணக்கா நம்மள வெரட்டுறான், நீ அதுக்கு மேல பாயுறியே!"

பதிலுக்கு வாயெடுக்க வந்தவனை, சமாதானப்படுத்தி ஒருவழியாய் அவர் களை சகஜ நிலைமைக்கு கொண்டு வந்த னர் மற்றவர்கள்.

"சரி எடமா இல்ல, தோ அந்த கக்கூ சுக்கு இந்தாண்டை எடமிருக்கு. படுக்கற துக்கு முன்ன அவுங்க அவுங்க காச கணக்கு பண்ணி முடிச்சி போட்டுட்டு படுக்கலாம், வாங்க அங்கணயே போய் எண்ணலாம். இன்னொருவன் யோசனை சொல்ல, கசங்கிய துணிப்பை களுக்குள், பிச்சையெடுக்கும் பாத்தி ரத்தை செருகி வைத்துக் கொண்டு இடத்தை மாற்றினார்கள்.

"தே காச இப்புடி தரையில கொட்டி எண்றியே? துணில கொட்டுனா என் னா?" அவனது யோசனையைப் பற்றிக் கவலைப்படாமல் அவள் பத்து காசு, கால் ரூபாய் என பிரித்து எடுத்துக் கொண்டி ருந்தாள். எல்லோரும் ரூபாய் நோட்டுக் களை கசங்கிய நிலையில் அப்படியே கீழே வைத்து மேலே அலுமினியப் பாத் திரத்தை வைத்திருந்தனர். சில்லறையை எண்ணிக் கொண்டே நிமிர்ந்து பார்த்த ஒருத்தி 'தே அவன் என்ன நம்பளயே பார்க்குறான்" என்றாள் சந்தேகமாக.

"அவன் கக்கூச பாத்துக்குறவன் சும்மா பாப்பான் புள்ள" ஆறுதலாய் மறு மொழிந்தான். சில நிமிடங்கள் கழித்து அந்த கட்டணக் கழிப்பறை ஆளிடம், போலீஸ்காரன் வந்து சிகரெட் பற்ற வைத் துக் கொண்டிருந்தான்.

"என்னடா இன்னைக்கு ஒண்ணும் பார்ட்டியக் காணோம்" சிகரெட் புகை பரவ, மெலிதாய் நகைத்துக் கொண்டு, அவனது மேசைமேல் ஏறி உட்கார்ந்து ஒரு காலை தொங்கவிட்டு ஆட்டினான்.

"பின்ன என்ன சார், ஆளுங்களை யும் தள்ளிட்டு காசையும் கேட்டா? இந்த பக்கமே வர மாட்டேங்குறாங்க"

"நான் என்னடா பண்றது. நைட் ஆனா கொறச்சலா அம்பது ரூவா எஸ். ஐக்கு எடுத்து வக்கணும். தண்ணிக்கு வேற ஏற்பாடு பண்ணணும். என்னா பண் றது சொல்லு"

"வழக்கமா வர்றவள கூடக் காணோம். ஏன் சார் அங்க ஒரு குட்டங் குளி கூட்டம் குந்திருக்கு, கைல சில்லறை பொறளுதுன்னு தோணுது புடிச்சா குவார்ட்டருக்கு ஆவும்".

"எதுவா இருந்தா என்னா, வா கவ னிக்கலாம்"

கடமை உணர்வோடு, மேசை மீதி ருந்த தொப்பியை எடுத்து தலையில் பொருத்திக் கொண்டு, கட்டணக் கழிப்



படிப்பகம்

www.padippakam.com

பறை ஆசாமியையும் கூட்டிக் கொண்டு வந்தான்.

இரண்டு ரூபாயும், ஐந்து ரூபாயு மாக நோட்டுகள் மிகுந்திருப்பதைக் கண்டு பூரித்திருந்தனர் தொழுநோயாளி கள். பணத்தை அள்ளி மடியில் முடிச்சு போடும் நேரம், போலீசு வந்து எதிரே நிற்க வெடவெடத்தது எல்லோருக்கும். ''தோ எழுந்து போறேன் சாமி'' சட்டென எழுந்து நகர நினைத்தவர்களை மடக்கி னான் போலீசு.

''ஏண்டா, கக்கூசுகாரன் மேசையி லிருந்து பணத்த எடுத்துட்டு எங்கடா நழு வப் பாக்குறீங்க. எடுறா பணத்தை இதுக் குதான் உங்கள பஸ் ஸ்டாண்டுக்குள்ள வுடறதில்ல''

மழுங்கிய விரல்களால் வாயைப் பொத்திக் கொண்டு நின்ற அவர்களுக்கு அழுகை பீறிட்டது. ''சாமி நாங்க யாரு காசையும் எடுக்கல சாமி, இது பிச்ச எடுத் தது வேணாலும் இங்க நிக்கறவங்கள கேட்டுப் பாருங்க'' பக்கத்தில் தள்ளி நின்ற மற்ற பயணிகளைக் காட்டி இறைஞ்சினாள்.



''தே வாய மூடு சாத்திடுவேன். அவன் டீ குடிக்கப் போற நேரம் பாத்து எடுத்துட்டு கதையா வுடுறே. இல் லேன்னா வா ஸ்டேசனுக்கு'' கத்திக் கொண்டே லத்திக்காம்பை ஓங்கினான்.

''இந்தா புடிடா இத'' அதிகாரத்து டன் பக்கத்திலிருந்த கட்டணக் கழிப் பறை ஆசாமியிடம் கூற எதிர்பார்த்திருந் தவன் போல அவன் எடுத்துக் கொண டான். தோ பாரு விடியறதுக்குள்ள இங்க ஒங்கள நான் பாக்கக் கூடாது, நவுரு எல் லாம் போங்கடா'' அடிப்பது போல பாவனை காட்டி விரட்டினான்.

முனகிக் கொண்டே, பதட்டத்துடன் நகர்ந்தவர்களைப் பார்த்து நக்கலாய் சிரித்துக் கொண்டான் கட்டணக் கழிப் பறை ஆசாமி. கொஞ்சம் தள்ளிப் போய் சாதனையாளனைப் போல் குலுங்கி குலுங்கிச் சிரித்தபடி போலீசு அவனிடம் ''யோவ் குவார்ட்டரும், பழமும் வாங்கி யா'' எனக் கூறிவிட்டு நினைத்து நினைத்து சிரித்துக் கொண்டான்.

கும்பலாக தள்ளிப் போனவர்கள் வாயிலும் வயிற்றிலும், அடித்துக் கொண்டு முனகியபடி திட்டித் தீர்த்தனர். வாய்விட்டு புலம்ப நினைத்த அவளை கவனமாக அடக்கினான் இன்னொரு வன். 'தே போனா போவுது. நம்மள புடிச் சிட்டுப் போனா பொழப்பும் போயிடும், அடிச்சும் புடுவான் வா வா' என்றான் பதட்டத்துடன்.

''சொளையாட்டம் அம்பது ரூவா வரைக்கும் புடுங்கிட்டான் போனா போவட்டுங்குறியே, திருட்டு பட்டம் வேற கட்டுறான் பொறுக்கி பய'' என் றாள் ஆத்திரம் தாளாமல். கோபத்தோடு உள்ளங்கையால் அவள் தலையில் இடித் தபடி ''சனியனே நீ வேற வம்ப விலை கொடுத்து வாங்குவ போல இருக்கு'' என்றான் ஆத்திரத்தோடு.

பக்கம், பக்கமாய் நின்று கொண்டி ருந்தவர்கள் பரிதாபமாக பார்வையை வீசியபடி வேடிக்கைப் பார்த்தனர். ''ஏம்பா போலீசுகாரன்கிட்ட போயி பணத்த காட்டுவியா. பாவம் போ உன் வயித்தெரிச்சல் சும்மா வுடாது'' என்றாள் ஆறுதலாக ஒரு முதியவள்.

''நான் எங்கம்மா அவங்கிட்ட பணத்த காட்டுனேன். பிச்சக்காரங்கன்னு கூட பாக்காம புடுங்கிட்டு போறான் பாவி'' என்றான் கலங்கியவாறு. திரும்ப, திரும்ப திட்டியவாறு புலம்பிக் கொண்டி ருந்தவளை வாயை மூடும்படி எச்சரித் தான் இன்னொருவன். இன்னொருத்தி யும் முணகியபடி சபித்துக் கொண்டிருந் தாள்.

அக்கம் பக்கமாய் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பலரும் தங்களுக்குள் அனுதாபப்பட்டு 'உச்' கொட்டினர்.

''ஏம்மா இத்தனை பேரு இருக்கு நீங்க பணத்த யாராவது ஒருத்தர் மறச்சி ருக்கக் கூடாது, சில்லறையாவது போனா போவுதுன்னு விட்ருக்கலாம்ல'' ஒருத்தி சொல்ல இன்னொரு பெண் ''ஆமாங்கு றன் இந்த ஆளுங்க அதனாலும் செஞ்சி ருக்கலாம். இப்புடி அநியாயமா வுட்டுட் டுதுங்க'' என்றாள்.

கூப்பிட்ட நேரத்தில் உதவுவதற்கு இல்லாமல் ஆளுக்கு ஆள் உபதேசம் பேசுவது அவளுக்கு எரிச்சலைத் தந்தது.

''சரி வா கெடக்கு உயிரு போனா லும் ஏன்னு கேக்காத சனங்க பேசுறத பாரு'' முனகியபடி, பேசிக் கொண்டிருந் தவனை அழைத்தாள். இன்னொருத்தி தாளமாட்டாமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

ஏற்கனவே படுக்க வந்தவர்களை விரட்டி அடித்தவனும் பக்கத்தில் நின்ற வர்களோடு சேர்ந்து கொண்டான்.

''அட நீங்க வேற இதுங்களுக்கு அறிவில்ல. இது என் காசு தர முடியா துன்னு சொன்னா, போலீசு என்ன உசி ரையா எடுத்துருவான். வீடா, வாசலா, ஸ்டேஷனுக்கு போனாதான் என்ன? சும்மா மூளை இல்லாததுங்க'' என்றான் அலட்சியமாக.

மழுங்கிய கையால் புடவைத் தலைப்பை எடுத்து, மூக்கைச் சிந்திக் கொண்டிருந்தவளுக்கு கேட்டவுடன் ஆத்திரம் வந்தது.

''இவுரு ரொம்ப மூள உள்ளவரு, அவன் காச புடுங்குனுப்ப நீங்களும் பாத் துகிட்டுதான் நின்னீங்க. ஒரு வார்த்த ஏய்யா அவங்ககிட்ட புடுங்குறேன்னு கேட்டா என்னா? உசுரா போயிடும். அப்ப கல்லு மாதிரி இருந்துட்டு இப்ப புத்தி சொல்றிங்க.''

''பாத்திங்களா இதுங்களுக்கு திமிரு அடங்காது. இன்னும் வேணும். நல்லதுக்கு சொன்னா நம்மகிட்டயே பாயறது. ஒங்கள உதைக்காம விட்டது தப்பு''.

பதிலுக்கு பேச முனைந்தவளை தனது கண்களால் தடுத்தபடி ஜாடை காட்டி, ''அவுங்க அவுங்க சோலியத் தான் பாப்பாங்க, நமக்குதான் புத்தி இல்ல போ போ'' விரக்தியுடன் மழுங்கிய கைக ளால் தோளை அணைத்தபடி அவளு டன் நடந்தான்.

●●●

படிப்பகம்

www.padippakam.com

## கோடம்பாக்கம் 'பாலிஸி'

மாணவர்களைக் கொண்டு இலவச இணைப்புகளைத் தயாரித்து வெளியிடும் ஆனந்தவிகடனின் ஒரு இலவச இணைப்பில் மதுரை தியாகராசர் கல்லூரி மாணவர்கள் வைரமுத்துவிடம் கேட்ட கேள்வி இது.

''டேக் இட் ஈஸீ பாலிஸி எழுத வேண்டிய அளவுக்குத் தமிழுக்குத் தட்டுப்பாடு வந்துவிட்டதோ?''

வைரமுத்தவின் பதில்: அப்படி அன்று, ஆங்கிலம் கலந்து போன வாழ்க்கையின் கலாச்சாரப் பிரதிநிதிகள் நாம். அந்தப் பாடலை பாடுகிறவர்கள் கல்லூரி மாணவர்கள். நம்முடைய கல்லூரி வாழ்க்கை ஆங்கிலத்திலிருந்து விடுபடவில்லை என்பதை அதுகாட்டுகிறது. தமிழ்ப் பற்றுமிக்க ஒரு சர்வாதிகாரத் தலைவன் கீழ் தமிழனுக்கென்று தனிநாடு அமைந்தாலொழிய தனித்தமிழ் என்பது சாத்தியமில்லை. அதுவரை 'டேக் இட் ஈஸி பாலிஸியைப் பின்பற்றுங்கள்''

அந்த மாணவர்கள் இதைக் கேட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். டயமண்டு முத்துவின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டு ''நான்தான் அந்த சர்வாதிகாரி'' என்று சொல்லிவிட்டு வந்திருக்கலாம்.



## ஹரே கிருஷ்ணா ஹரே மடோனா

ஹரே கிருஷ்ணா இயக்கத்தை தொடங்கிய பிரபுபாதாவுக்கு அடுத்த வருட ஆரம்பத்தில் வரும் நூற்றாண்டு விழாவுக்கு அழைக்கப்படுகிறார் செக்ஸ் பாடகி மடோனா. இவரை முக்கியப் பிரமுகராய் அழைத்ததற்கு காரணம் கேட்ட போது ''அண்மையில் மடோனா ''லைக் எ ப்ரேயர்'' (ஒரு பிரார்த்தனை போல) எனும் இசை ஆல்பம் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அது தெய்வீகமான இசை. கேட்பவர்களை பக்திப் பரவசத்தில் மூழ்கடித்துவிடும்'' என்கிறார்கள் ஹரே கிருஷ்ணா பக்தர்கள். மார்க்கம் சரிதான் கோபியர்களின் ஆடையை உருவி பரவசத்தில் மூழ்கினார் பகவான். மடோனாவை அழைத்து பரவசத்தில் மூழ்குகிறார்கள் வாரிசுகள்.

## அவாளின் அலை வரிசை

ஞாயிற்றுக் கிழமை தோறும் சென்னைத் தொலைகாட்சி முதல் அலை வரிசையில் 'வண்ணக் கோலங்கள்' எனும் எஸ்.வி.சேகரின் நாடகம் ஒளிபரப்பாகிறது. அதில் ஒரு தொடரில் அலுவலகங்களில் கோப்புகளைத் திருடும் கதாபாத்திரத்தின் பெயர் ''பைல் பாண்டியன்''. அந்த கதாபாத்திரத்திடம் எஸ்.வி.சேகர் உரையாடும் வசனம் இது:

''பைல் பாண்டியா, நான் சொன்ன பைலை எப்படியாவது திருடிக் கொடுத்துடு''

''திருடித் தந்தா எனக்கு ''பிப்டி... பிப்டி''

''உனக்குத் தெரியாதா இப்பல்லாம் 69 பர்சண்ட்''

ஈடேறாத இட ஒதுக்கீடு கொள்கையையே இப்படி கேவலமாக எள்ளி நகையாடும் அவாளின் கைவரிசையை, அலை வரிசை என்ற பெயரில் அனுமதிக்க முடியுமா?

## கலகம்

'இந்தியா டுடே' சென்ற ஆண்டில் இலக்கிய மலர் ஒன்று வெளியிட்டிருந்தது. நிறப்பிரிகை பத்திரிகையின் சார்பில் அந்த இலக்கிய மலரை விமர்சித்து ஒரு கூட்டம் நடத்தினர். அதன் பார்ப்பனத் திமிரைக் கண்டிக்கும் வகையில் இந்தியா டுடே இலக்கிய மலரின் தாள்களைக் கிழித்து மலம் துடைக்கப் பயன்படுத்துமாறு கூறி கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்கு வழங்கினர். ''செயல் அதுவே சிறந்த சொல்'' என்பது நிறப்பிரிகையின் கொள்கையாதலால் அதன் வாசகர்களில் சிலர் மிகுந்த சிரமத்தின் பேரில் மலத்தைக் காகிதத்தில் துடைத்து, அதை இந்தியா டுடே இதழுக்கு அனுப்பியும் வைத்தனர் என்று கேள்வி.

இந்த ஆண்டு 'இந்தியா டுடே' இலக்கிய மலரில் நிறப்பிரிகை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ரவிக்குமார் என்பவர் கதை எழுதியிருக்கிறார். மலம் துடைத்த காகிதத்தால் முகம் துடைக்கலாமா? பதறாதீர்கள். எல்லாம் ஒரு 'கலகம்'தான்.

## குப்பைக் கூடை



## மரபு வழி

ஏப்ரல் மாத கணையாழி இதழில் ஒரு வாசகரின் கேள்வி: ''டங்கல் திட்டம் நாட்டுக்குப் பயன் தருமா?

கணையாழியின் பதில்: ''முதலில் டங்கல் திட்டம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அதைத் தெரிந்து கொண்டபின் உலக நாடுகளுக்கு இம்மாதிரி ஒரு திட்டம் தேவைதான் என்பது தெரியவரும். அதாவது உலக நாடுகளுக்கு இந்தியா ஒரு சந்தையாகும் போது இந்தியாவுக்கு உலக அளவில் வியாபாரச் சந்தை கிடைக்கிறது!''

பிரமாதம்தான். இராமாயணத்தில் சீதையை அடையாளம் காட்ட ஒரு கணையாழி. இப்போது உலகச் சந்தைக்கு பாரதமாதாவை அடையாளம் காட்டுகிறது இந்தக் கணையாழி.

## 'தொழில் சுத்தம்'

தேவி வார இதழ் வந்த விளம்பரம் இது. —

''அனைத்துப் பிரச்சனைகளும் தீர்க்கப்படும்'' - ''உங்களை வாட்டும் பிரச்சனை எதுவாயினும் சரி! திட்டவட்டமான ஆன்மீக ஆலோசனையும், அருள் வாக்கும் பெற்று வாழ்க்கையில் சுபிட்சம் பெற்று பயனடைய இந்தியாவிலும், அமெரிக்கா, ஆப்பிரிக்கா, சிலோன், சிங்கப்பூர், மலேசியா, குவைத் போன்ற அயல்நாடுகளிலும் அருள்வாக்குகளின் மூலம் பிரபலமாகி ஏராளமான வாடிக்கையாளர்களைக் கவர்ந்துவிட்ட அருள்வாக்கு தவத்திரு யோகி. கே.அருணாசல சுவாமிகள் கண்கண்ட தெய்வமாகிய அன்னை பராசக்தியின் அருளால் அருள்வாக்கு தந்து நல்வழி கூறுகிறார்''.

''பெயர், பிரச்சனைகளை எழுதி, அருள்வாக்கும், நல்வழியும் பெற இரண்டு ஒரு ரூபாய் ஸ்டாம்ப் அனுப்பி தொடர்பு கொள்ளவும். ஜாதகம், கை ரேகை தேவையில்லை'' வேறெங்கும் கிளைகள் இல்லை என்று அறிவிக்காததுதான் பாக்கி.

தாங்கள் வாடிக்கையாளர்களாகி விட்ட உண்மை பக்தகோடிகளுக்குப் புரிந்தால் சரி.



படிப்பகம்

www.padippakam.com



• 1855

# சந்தால் வீர எழுச்சி

பஷீர்

"அவர்கள் எங்களிடமிருந்து மரங்களைப் பறித்துக் கொண்டார்கள்; மீன்களை அள்ளிக் கொண்டார்கள்; நிலங்களைப் பிடுங்கிக் கொண்டார்கள்; பூமி எல்லைகளையே சுரண்டி எடுத்துவிட்டார்கள்..." பழங்குடி விவசாயிகளின் மண் உரிமை பறிக்கப்பட்ட போது அவர்கள் நெஞ்சிலிருந்து வெடித்த வேதனை இது.

சந்தால் பழங்குடிகளுக்கோ இதே போன்ற வேதனை ஆழமானது. நெடுங்காலம் வெட்டிய இடத்திலேயே வெட்டி ரணம் பாய்ந்த வேதனை. 1855-இல் இந்த வேதனைகளுககெல்லாம் அவர்கள் ஓர் விடிவைக் கண்டார்கள். அதுவே சோட்டா நாக்பூர் பிராந்தியமே கிடுகிடுத்த சந்தால் எழுச்சி! ஆயுத எழுச்சி!

☆ ☆ ☆

இந்தியாவில் இரண்டாவது மிகப் பெரிய பழங்குடி இனம் பீகார் சந்தால் இனம். எல்லாப் பழங்குடிகளையும் போலவே அவர்கள் தங்கள் பாரம்பரிய வீடு போல காட்டை மதித்தார்கள். அதுவே அவர்களின் பிறந்த வீடு; அவர்களின் தொட்டில்; தாய்மடி; அடர்ந்த காடுகளில் எதிரொலிக்கும் எந்தச் சிறு ஒலியும் அவர்களுக்குத் தெரியும்; பறவை, செடி கொடி, விலங்கு, பூச்சிகள் அனைத்தும் தெரியும். காடும் அவர்களை நேசித்து அவர்களுக்கு எல்லாம் கொடுத்தது. தாய் போல - தாலாட்டியது, சீராட்டியது;

சந்தால் கிராமங்களில் உள்ள விளை நிலங்களை எந்த ஒரு தனிநபரும் தனிச் சொத்தாகப் பார்த்ததில்லை; எல்லாருக்கும் பொதுவானது அந்தச் சொத்து. பங்கீடு, மறுபங்கீடு எல்லாம் சந்தால் கிராமப் பஞ்சாயத்துதான் செய்யும். இந்த மரபுகளை அத்துமீறி மிதித்து நசுக்கி அவமதித்து உடைத்துப் போட்டது கிழக்கிந்தியக் கம்பெனி. ஒரே ஒரு சட்டம் போட்டு ஜமீன்தாரி முறையை கிராமங்களில் திணித்தது. இதன்படி மாவட்டங்கள், தாலுக்காக்கள், கிராமங்கள், பழங்குடி வாழும் பகுதிகள் எல்லாவற்றையும் தனியார் சொத்துக்களாக ஜமீன்தார்களுக்கு மாற்றிக் கொடுத்தது.

வரி வசூலிலிருந்து தொடங்கி எல்லா அதிகாரங்களும் பிரிட்டிசாரால் ஜமீன்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பிரிட்டிசார் வருவதற்கு முன்னால் வரிகள் தானியமாகச் செலுத்தப்பட்டன, இப்போது பணம் திணிக்கப்பட்டது; பணத்தின் தேவையை ஒட்டி நில விற்பனை, அடகு, நிலம் கை மாறுதல், இருப்பு போன்றவை வழக்கத்தில் புகுத்தப்பட்டன். வியாபாரியும், வட்டிக்கடைக்காரனும் கடன் கொடுத்தார்கள். இதுவரை சந்தால்கள் சந்தித்தேயிராத சட்ட விசயங்களும், அதிகார வர்க்கமும் பேய்களாக வந்து நின்று அச்சுறுத்தின. பயிரிடும் விவசாயிக்கும் ஜமீனுக்குமிடையே ஒரு நூறு இடைத்தரகர்கள் உருவானார்கள். இதுவரை தனது சொந்த ரத்த பாசங்களோடு மட்டுமே வாழ்ந்த சந்தால்களின் மத்தியில் அந்நியர்கள் ஊடுருவினார்கள்; அவர்களை எதிரிகள் என்றார்கள் சந்தால்கள்

மொத்தத்தில் பழங்குடிகளின் தாய்ப்பூமியை அவர்களிடமிருந்து பிரித்துவிட்டார்கள். அண்டவந்த ஜமீன்கள் நிலங்களைப் பிடுங்கிக் கொண்டு சந்தால்களைக் காட்டுக்குள் விரட்டினார்கள் சந்தால்கள். புதிய இடங்களில் காட்டை எரித்து விளைநிலங்களை உருவாக்கினார்கள். மீண்டும் ஜமீன்கள் கம்பெனிப் படையின் துணையோடு வந்து அந்த இடத்தையும் பறித்துக் கொண்டார்கள். பலமுறை விரட்டப்பட்ட சந்தால்கள் ஏறக்குறைய கங்கையின் கரைக்கே வந்து விட்டார்கள்.

"சந்தால்கள் சாதுவானவர்கள்; ஒரு பகுதியிலிருந்து விரட்டினால் இன்னொரு இடத்துக்குப் போய் வாழ்ந்து கொள்வார்கள்" என்று ஜமீன்கள் எடை போட்டதை உடைத்தெறியத் தொடங்கியபோதுதான் உண்மையான சந்தால்களை அவர்கள் சந்தித்தார்கள்.


☆ ☆ ☆

பழங்குடிக்குச் சம்பந்தமேயில்லாத ஆட்கள் ஜமீனின் எடுபிடிகளாக 'வரியைக் கொடு' என்ற கட்டளையோடு வந்தார்கள். வரியைக் கட்ட காசு இல்லை என்று கைவிரித்தபோது வலுவந்தமாகச் சந்தால்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன; ஜமீன்களின் கட்டில்களுக்குப் பழங்குடிப் பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டார்கள். கதறக் கதறக் கற்பழிக்கப்பட்டார்கள். இணங்க மறுத்தவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார்கள். படிப்பறிவற்ற சந்தால்களிடமிருந்து 50 முதல் 500 மடங்கு வரை அநியாயக் கந்துவட்டி கறந்தார்கள்; சந்தைகளில் போலி எடைகளை வைத்து ஏமாற்றிக் கொள்முதல் நடத்தினார்கள்;

படிப்பகம்

www.padippakam.com





**இக்கட்டுரைக்கான ஓவியங்கள்: மருது**
**(சந்தால் பழங்குடியினரின் கோட்டோவியப் பாணியில் வரையப்பட்டவை)**

ஏழை சந்தால் நிலங்களுக்குள்ளே அத்து மீறி மாடு, குதிரை, யானைகளை இறக்கிப் பயிர்களை அழித்தார்கள்; மோசடிக் கடன் பத்திரங்களில் கைநாட்டு வாங்கி சந்தால் குடும்பங்களைப் பரம்பரைக் கொத்தடிமையாக்கினார்கள். இவை ஜமீனின் ஆதிக்க அடையாளங்கள்.

சவுக்கார்கள் - இவர்களுக்கும் உழைப்புக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை; இவர்களது பிழைப்பும் மண்ணை நம்பியில்லை. பணமே அவர்களின் கடவுள். ஆடே இல்லாமல் ஆடு வியாபாரம், மாடே இல்லாமல் மாட்டு வியாபாரம் செய்து விடுவார்கள். பயிர், கால்நடை, சந்தால் குடும்பங்களையே கூட வட்டிப் பணத்துக்கு ஈடுகாட்டுவர்கள். வட்டிப் பணமே அவர்களின் கடவுள். வெற்றுத் தாளை முன்னால் வைத்துக் கொண்டு மணிக்கணக்காகக் கணக்குப் போட்டு வட்டியை விரித்துப் பெரிதாக்குவார்கள். இவர்கள் அனைவரும மொய்ரா, பனியா, போஜ்பூரி, பட்டியா, வங்காளி வியாபாரக் குடும்பங்கள்; வந்தேறிகள்; இவர்கள் ஏராளமான எண்ணைய் வித்துக்கள், கடுகு ஆகியவற்றை மோசடிக் கொள்முதலில் பறித்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யும் தரகர்களாக மாறினார்கள். இவை சந்தால்களை ஏய்த்த சவுக்கார்களின் சுரண்டல் அடையாளங்கள்.

அரசாங்கம் - ஜமீன், சவுக்கார் இருவரையும் பாதுகாக்கும் கம்பெனித் துரைமார்களையும், அதிகாரிகளையும்தான் சந்தால்கள் அரசாங்கமாகப் பார்த்தார்கள். துரைகளின் பங்களாக்களை, அவர்களை ஏற்றிச் செல்லும் ரயில்களை வெறுத்தார்கள். எழுச்சியின் போது ரயில் நிலையங்கள் தாக்கப்பட்டன; அரசாங்க அலுவலகங்கள், துரைமாரின் பங்களாக்கள், சிறைகள் அடித்து நொறுக்கப்பட்டன. ரயில் ரோடு நாகரிகம் அல்ல, சுரண்டலின் சின்னம் சந்தால்களுக்கு. ரயில் ரோடு கொண்டு வந்த துரைமார்கள் சந்தால் பெண்களைக் கற்பழித்ததை, வரமறுத்தவர்களைக் கொன்றதை, வேலைகளுக்காகச் சிறுவர்களைக் கடத்திச் சென்றதை அவர்கள் மறக்கவில்லை.

ஜமீன், சவுக்கார், சர்க்கார் - இந்த மூன்று பேரின் கூட்டினை எதிரி, அந்நியர் என்று சந்தால்கள் அறிவித்தார்கள். அவர்களின் அடக்குமுறை, ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க எழுச்சிப் பிரகடனம் செய்தார்கள்.

சிறுசிறு எதிர்ப்புக்களாகத் தொடங்கி எழுச்சியாகப் பரிமாணம் கொண்டது சந்தால் பழங்குடிப் போராட்டம். ஒவ்வொரு எதிர்ப்பின் போது சந்தால்கள் கைது செய்யப்பட்டார்கள்; அவர்களின் கைகள் முதுகில் பிணைத்துக் கயிற்றால் கட்டப்பட்டன; சந்தால்களின் பார்வையில் கயிறுகள் அடக்குமுறைக் கருவிகள். ஒரு சாதாரண எளிய உழைப்பாளி சந்தால் கோச்சோ ஜமீன்தரோகாவுக்குச் சவால் விட்டான்; கோச்சோ சொன்னான்: "எத்தனை ஆயிரம் அடி கயிறு உனக்குக் கிடைத்துவிடும், பார்த்து விடலாம்; அமைதியான எல்லாச் சந்தால்களையும் கட்டிப் போட்டு இழுத்துச் சென்று ஆங்கிலேயரிடம் ஒப்படைத்து விடுவாயா, பார்த்து விடுவோம்."

> "இந்த விரல்களால்தானே
> வட்டிக்காசை
> வாரிக்கொண்டாய்?
> கொள்ளைப் பணத்தை
> அள்ளிக் கொண்டாய்?
> பசியால் துடித்த ஏழைகளின்
> வாயிலிருந்து சோற்றைப்
> பறித்தது உன் கைகள்தானே?

சவால்கள் இல்லாமல் உழைக்கும் விவசாயிகளின் போராட்ட வரலாறுகள் இல்லை. 'எங்கள் நியாயத்தைக் கேட்கிறோம்' என்ற உழைப்பவர் உரத்துக் கூறுவார்கள்; 'என்ன அநியாயம், இப்படியும் நடக்குமா?' என்று ஆண்டைகள் தாண்டிக் குதிப்பார்கள்; அதுதான் வாடிக்கை.

"எதுக்குடா இங்க வந்தீங்க?"

"எங்களுக்குச் சேர வேண்டியதைக் கேக்க..."

"அது என்னடா சேர வேண்டியது. கொள்ளையடிக்க வந்திருக்கோமுன்னு சொல்லடா நாயே..."

"அப்புடி நீ நெனச்சா அப்புடியே வெச்சுக்குவோம்..."

— இது 1905-ஆம் ஆண்டில் ரசிய விவசாயிகள் எழுச்சியில் ஒரு நிகழ்ச்சி.

"வரியக் கொடுடா என்றா கேட்கிறான்? அவனை வெட்டி வீசுங்கள்! எல்லா கிராமங்களிலும், நகரங்களிலும் நியாயத்துக்காகக் கலகம் செய்யுங்கள்! ஆயுதங்களை கர்ரு நதியில் ரத்தம் போகக் கழுவி எடுங்கள்!"

— இது சோட்டா நாக்பூர் 'கோல்' பழங்குடிகளின் வீரச் சூளுரை.

சந்தால் கோச்சோவின் சவால் வெற்றுச் சவால் அல்ல. அவர்கள் போராட்ட வரலாற்றின் பக்கங்களே சாட்சி.

☆ ☆ ☆

1855-இன் மைய நாட்கள். சந்தால் பகுதி ராஜ்மகால் குன்றுகள் ரத்தத்தால் சிவந்து கொண்டிருந்தன. சந்தால் ஆயுதப் போராட்டம் முன்னேறிக் கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அது ஒரு மண் குடிசை. உள்ளே 45 சந்தால் வீரர்கள் மறைந்திருந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். சுற்றிலும் ஆங்கிலச் சிப்பாய்கள் சூழ்ந்து கொண்டு சரமாரியான துப்பாக்கிக் குண்டுகளால் தாக்கினார்கள்; ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதில் சென்றது. அம்புகள் சீறிப் பாய்ந்தன. அனேகமாக குடிசை சல்லடைக் கண்களாகத் துளைக்கப் பட்டு விட்டது - இனியும் ஒட்டிக் கொண்டு ஊசலாடும் ஒரே ஒரு கதவைத் தவிர வேறு தடுப்புக்கள் இல்லை. எதிரி வீரர்கள் கதவைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தனர்.



அங்கே அவர்கள் கண்ட காட்சி - சுற்றிலும் சக போராளிகள் மார்பிலும் தோளிலும் உடலின் பல இடங்களிலும் குண்டு பாய்ந்து செத்துக் கிடக்க ஒரே ஒரு முதியவர் மட்டுமே உயிரோடு நின்றிருந்தார். ''சரணடைந்து விடு, பிழைத்துக் கொள்வாய்'' என்று ஒரு ஆங்கிலேயச் சிப்பாய் அவரைப் பார்த்துக் கத்தினான். அடுத்த கணம் ஓர் அசைவு - ஒரே எட்டில் முதிய வீரர் அந்தச் சிப்பாய் மீது பாய்ந்தார்; கையிலிருந்த சண்டைக் கோடரியால் ஒரே வெட்டில் வீழ்த்தினார். அடுத்த நொடியில் அவரும் சாய்ந்தார். அந்த முதிய வீரர் உடம்பு முழுவதும் ஏற்கெனவே ஏராளமான குண்டுகள் பாய்ந்து ரத்தம் கொப்பளித்து வழிந்து கொண்டிருந்தது. அந்நியப் படை அப்படியே அதிர்ச்சியில் உறைந்து நின்றது.

முட்டாள்கள், கோழைகள் என்று சந்தால்களைத் தூற்றிய ஆங்கிலேயக் கம்பெனிப் படைகளும் சரி, ஜமீன் - சவுக்கார்களும் சரி எழுச்சியின் போது கிலி பிடித்து நடுங்கினார்கள்.

சந்தால்கள் சமவெளி மக்களில் பல்வேறு 'தாழ்ந்த' சாதிப் பிரிவினரை போராட்டத்தின் நட்புச் சக்திகளாக வென்றெடுத்ததைப் பார்த்துப் பதறினார்கள்.

பெண்கள் கூட சந்தால்களுக்காக உளவு வேலை பார்த்ததையும், தங்கள் உளவுகளை முறியடித்ததையும் கண்டு பீதி அடைந்தார்கள்.

பழங்குடிக் கலையின் கருவிகளான முழவுகளும், குழலும் போராட்ட காலத்தில் செய்தி அறிவிப்புக் கருவிகளாகவும், வீர எழுச்சி இசையாகவும் மாறியதைக் கண்டு வெருண்ட ஆங்கிலேய எடுபிடி போலீசும், ராணுவமும் கைதுகளின் போது முழவுகளையும், குழலையும் கூடப் பறித்தார்கள்; செய்தி வாசிக்கும் வழிகளை அடைத்து விட்டதாகக் கருதிப் பெருமூச்சு விட்டார்கள். ஆனால் விரைவிலேயே புதிய முழவுகள், புதிய குழல்கள் களத்திற்கு விரைந்ததைக் கண்டு தூக்கம் இழந்தார்கள்.

களத்தில் பல முறை ஆங்கிலேயப் படைகள் சிதறி ஓடின. தன்னை ஒத்த 25 அதிகாரிகளை இழந்துவிட்டுத் திக்குமுக்காடிய மேஜர் பர்ரோஸ் படையை விட்டுவிட்டுத் தலை தெறிக்கத் தப்பி ஓடினான். அவன் அறிக்கையில் எழுதினான்; ''கலகக்காரர்கள் உறுதியாக நின்று போர் செய்தார்கள். கைகளால் அம்பு எறிந்தார்கள்; கால்களாலும் வில் நாண் இழுத்து அம்பு எறிந்தார்கள். கைக் கோடரிகளாலும் கூடச் சண்டை போட்டார்கள்.''

''ராஜ்மகால் குன்றுகள் சிவந்தன'' என்று எழுதுவது இலக்கிய வருணனை அல்ல. ஆக்கிரமிப்பாளரை விரட்டிய போரில் அப்பிராந்தியத்தில் ரத்த ஆறுதான் ஓடியது, பல ஆயிரம் ரத்த சாட்சிகளின் வரலாறுகள் மக்களிடையே கதைகளாக, பாடல்களாக உலவுகின்றன.

எழுச்சிக்குத் தலைமை தாங்கிய சீது, கானு என்ற தியாக வீரர்கள் இன்றும் உடன் இருப்பதுபோல் பசுமையான நினைவுகளை சந்தால்கள் பல தலைமுறைகளாகக் காப்பாற்றி வருகின்றனர்.

☆ ☆ ☆


சீது, கானு மற்றும் பிற தலைவர்கள் சந்தால் மக்களோடு கலந்து ஐக்கியமாகிப் போராடியவர்கள். இலையால் செய்யப்பட்ட தொன்னையில் மஞ்சளும், எண்ணெய்யும் எடுத்துக் கொண்டு அவர்கள் பல கிராமங்களுக்குச் சென்றார்கள். அது ஒரு பொது நிகழ்வுக்கான அழைப்பு போல. கூட்டாக மீன் பிடிக்க, வேட்டை ஆட இவ்வாறு செய்தி சொல்வார்கள். இப்போது போராட்டத்துக்கும் அதையே ரகசியச் செய்தி அறிவிப்பாக மாற்றிக் கொண்டார்கள். அதேபோல சால்மர கிளைகள் கூட்டத்துக்கான அறிவிப்பாக அனுப்பப் பட்டது. இதைக் கொண்டு வருவோரிடம் 'எங்கே கூட்டம்?' என்று கேட்டு அறிந்து கொள்வார்கள்.

சந்தால் எழுச்சி ஆலோசனைக் கூட்டத்துக்கே 7000 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அடுத்த கூட்டத்தில் 10,000 பேர் கூடி விவாதித்து எழுச்சி பற்றி முடிவு செய்தார்கள். எழுச்சியைக் குறிப்பிட வேட்டை, மீன் பிடித்தல் என்ற சங்கேதச் சொற்களை சந்தால்கள் பயன்படுத்தினார்கள். இதில் அனைத்து சந்தால்களும் கலந்து கொண்டார்கள். வயது வித்தியாசம் கிடையாது; சண்டைக்குப் பயன்பட மாட்டார்கள் எனக் கருதப்படும் நோயாளிகள் தவிர மற்றவர்கள் அனைவரும் ஆயுதம் ஏந்தினார்கள்.

தலைவர் என்பவர் வீரரில் ஒருவர். கற்பனைக் கதாநாயகர்களாக, சூப்பர் ஹீரோக்களாகத் திரைப்படங்களில் காட்டுகிறார்களே அவர்களைப் போல் அல்ல. சந்தால் தலைவரும் போரிடுவார்; சாதாரண மக்களும் போரிடுவார்கள். கூடுதலாக அவர் தலைமை தாங்கி வழி நடத்துவது சிறப்பம்சமாகும். இதனால்தான் சீது, கானு புகழ் இன்றளவும் நின்று நிலைக்கிறது.

☆ ☆ ☆

எதிரிகள் சந்தால்களின் அம்புகளுக்கு மட்டுமல்ல, அவர்கள் உருவாக்கி நடைமுறைப்படுத்திய மக்கள் மன்றத்திற்கும் அஞ்சினார்கள். எதிரிகளை அண்டிப் பிழைத்த கூலி எழுத்தாளர்கள் ''ரத்த வெறி பிடித்த இந்தக் காட்டு மிராண்டிகளுக்கு எதிராகப் பயங்கரத்தைக் கட்டவிழ்க்காமல் இந்த எழுச்சியை நாம் அடக்க முடியாது'' என்று அரசைத் தூண்டி எழுதினார்கள்.



14 இடங்களில் ஒரே நேரத்தில் கலகம் வெடித்த போது ஓரிரு இடங்களில் ஓரிரு கொலைகள் மட்டுமே நடந்தன. கொலை அவர்களின் நோக்கம் அல்ல. அவ்வாறிருந்தால் பல ஆயிரக் கணக்கான பண்ணைகளின் தலைகள் வெட்டப்பட்டிருக்கும். ஆனால் மக்கள் மன்றத்தில் விவாதித்து முடிவெடுத்த வழக்குகளில் கொடூரமான வட்

படிப்பகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600 018.
அச்சிடுபவர்: வி.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094

www.padippakam.com



டிக்காரனுக்கும், பண்ணைக்கும் கடுமையான தண்டனை வழங்கவும் தவறவில்லை.

வட்டிக்கடை முதலாளிகளுக்கு மகாஜன்கள் என்று பெயர். எழுச்சியின் போது ஒரு மகாஜன் விசாரணையில் சிக்கினான். பழங்குடிகள் அவன் கையில் தாம் பட்ட கொடுமைகளை விவரித்தார்கள். அநியாயமாக இழந்த நிலங்கள், கண் போல் வளர்த்த மாடுகள், ஆடுகள், உயிராக நேசித்து வளர்த்து அவனுக்குக் கொத்தடிமையாக அனுப்பட்ட தன் மகன் - இப்படி கொடூரங்களை வரிசைப் படுத்தினார்கள். பலர் பாழாக்கப்பட்ட தம் வாழ்க்கையை சாட்சியமாக பலர் முன்னே திறந்து வைத்தார்கள். இறுதியில் அவனுக்கு மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. அவ்வளவு கொடூரனை ஆடு வெட்டுவது போல வெட்டித் தீர்க்க யாருக்கும் இஷ்டமில்லை; எத்தனை சந்தால் குடும்பங்கள் எவ்வளவு வருடங்கள் எவ்வளவு வேதனைகள்?

அந்த மகாஜன் மன்றத்தின் நடுவே நிறுத்தப்பட்டான் - பாதங்கள்: அவை சந்தால் மண்ணை மிதித்துத்துவைத்து அழித்தவை; முதலில் அவை வெட்டப்பட்டன

நான்கணாவைத் திரும்ப வாங்கி விட்டோம் என்று சொன்னார்கள் சந்தால்கள்.

ஓங்கிய வாளுக்கு அடுத்த குறி: கால்கள், அவை சந்தால்களை இஷ்டப்படி எட்டி உதைத்தவை; பெண்களை மானபங்கப்படுத்தி உதைத்தவை.

எட்டணா சேர்ந்து விட்டது இப்போது.



உடல்: சுரண்டலின் அருவெறுப்பான அடையாளம். இரு துண்டாக வெட்டப்பட்டது.

பணிரெண்டனா வசூலாகி முடிந்தது.

தலை: வட்டி மூலதனத்தின் பீடம் - ஒரே வெட்டில் கிள்ளி எறியப்பட்டது. கோரமாக அலறிக் கொண்டிருந்த அதன் கண்கள் அணைந்தன.

கடைசியில் பதினாறு அணாக்களும் முழுசாக வசூலிக்கப்பட்டுவிட்டன.

சந்தால் போராளிகள் மகிழ்ச்சியில் குதித்து ஆடினார்கள். ஆக்கிரமிப்பாளரில் ஒருவன் அழிக்கப்பட்டது அவர்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்ற லட்சியத்தில் இருந்து தான்.

விசாரணையையோ, மன்றங்களையோ எல்லா பழங்குடிக் கிராமங்களும் வரவேற்றன; ஆனால் ஆங்கிலேயரின் அடிவருடிகளும், ஜமீன்களும் எதிர்த்தார்கள்.

''இந்த விரல்களால்தானே வட்டிக் காசை வாரிக் கொண்டாய்? கொள்ளைப் பணத்தை அள்ளிக் கொண்டாய்? பசியால் துடித்த ஏழைகளின் வாயிலிருந்து சோற்றைப் பறித்தது உன் கைகள் தானே?'' - இப்படி வட்டிக்கடை தீனதயாள்ராயின் தலை வெட்டப்பட்டு ஊர்ச்சந்தையில் ஈட்டி முனையில் செருகப்பட்டது. பழங்குடிகள், சந்தால் அல்லாத ஏழைகள் இதை வரவேற்றார்கள்.

எதிரிகள் ஆங்கிலேயருக்குத் தகவல் அனுப்பி எதிர்த்தாக்குதல் தொடுக்க அவசரமாக முயற்சி எடுத்தார்கள்; பகல்பூர் ஜமீன்கள், உள்ளூர் அவுரிப்பயிர் முதலாளிகள், முர்ஷிதாலாத் பகுதி நவாப் நசீம், ஐரோப்பிய அவுரி முதலாளிகள் ஆகியோர் அரசுக்கு பணம் உட்பட எல்லா உதவிகளும் தாராளமாகக் கொடுத்தார்கள்.

எதிர்த் தாக்குதல் கொலைவெறியோடு நடத்தப்பட்டது. சந்தால் கிராமங்கள் பல முழுக்க அழிக்கப்பட்டன. பயிர்கள், வீடுகள், பெண்கள், குழந்தைகள் என்று கண்ணில் பட்டதையெல்லாம் ஆங்கிலேய வெறிநாய்கள் குதறின. சந்தால் மக்களை கொலைக்காரர்கள், கொள்ளையர்கள் என்று பழி தூற்றியவர்களே பல ஆயிரம் கொலையினைச் செய்தார்கள்.

அதுபோதாதென்று சந்தால்களின் எல்லாக் கிராமங்களின் மீதும் 'தண்டத் தொகை' விதிக்கப்பட வேண்டும் என்றும் எல்லா சந்தால்களுமே தண்டிக்கப்பட வேண்டும் என்றும் ஆங்கிலேயரின் ஊதுகுழலான ஏடு எழுதியது. அந்த ஏட்டின் பெயர் வேடிக்கையானது ''இந்தியாவின் நண்பர்கள்.''

☆ ☆ ☆

அன்று சீதுவும் கானுவும் மற்ற தலைவர்களும் ஆங்கிலேய கம்பெனி வெறி நாய்களால் தூக்கிலிடப்பட்டார்கள். சந்தால்கள் அந்த மாபெரும் வீரர்களைக் காடுகளில் கூவி அழைத்தார்கள். காடுகளுக்குள்ளே பாய்ந்து சென்ற அந்தக் குரல்கள் சீது, கானுவைத் தேடிச் சென்றன! இன்று அதே பரம்பரையில் வரும் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் இதோ பதில் குரல் கொடுக்கிறார்கள்.

அன்று இருபத்தைந்தாயிரம் சந்தால் வீரர்கள் கொடுத்த இன்னுயிர்கள், இன்றும் புரட்சிக் கனல் மணக்கும் பூக்களாக போராட்டத் தடமெங்கும் மணம் வீசி எழுச்சி ஊட்டிக் கொண்டு தான் இருக்கின்றன!

☆ ☆ ☆

படிப்பகம்